Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 கார்த்திகை 21 ஹிஜ்ரி 1428 துல்கதா 03 (06.12.2005) செவ்வாய்க்கிழமை இதழ் 67

விமானம் மற்றும் கப்பல் மூலம்
உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ, பெரியதோ,
எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும் எந்தநேரமும்
குறைந்த கட்டணத்தில் அனுப்பிட
மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு
20 % விசேட சலுகை
லண்டனுக்கான 5 Kg பொதிக்கு
1 Kg க்கான கட்டணம் 500/=
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors) Tel - 021 222 7835 Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310
36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253
குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 22 2027 Fax - 021 226 2993

## உஷார் நிலையில் படையினர்; நாடெங்கும் தீவிர பாதுகாப்பு!

கொழும்பு —

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த மூன்று நாட்களாக இடம்பெற்றுவந்த வன்முறைச் சம்பவங்களை அடுத்து கொழும்பு உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் பாதுகாப்பை பலப்படுத்த அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பதற்றமான சூழல் உருவாகி வருவதால் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இதனால் தாக்கம் ஏற்படக்கூடும் என்பதாலேயே அரசாங்கம் பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இராணுவம் கடற்படை விமானப்படை ஆகியவற்றுடன் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படை ஆகியவற்றை உள்ளடக்கியதாக பாதுகாப்பை பலப்படுத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

குறிப்பாக கொழும்பு நகரில் முப்படைகளின் உதவியுடன் பொலிஸார் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளதுடன் தேடுதல் நடவடிக்கைகள் வீதிச் சோதனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

வடக்கு - கிழக்கில் இருந்து கொழும்புக்கு வருவோர் குறித்து விசேட விசாரணைகளை நடத்தப்படுவதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை வடக்கு - கிழக்குப் பகுதிகளிலுள்ள படை முகாம்கள் கடற்படை (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகா இன்று பதவியேற்பு!



கொழும்பு —

இலங்கையின் 18 ஆவது இராணு வத் தளபதியாக லெப். ஜெனரல் சரத் பொன்சேகா இன்று காலை உத்தியோகபூர்வமாக பதவியேற்கவுள்ளார்.

கொழும்பிலுள்ள இராணுவத் தலைமையகத்தில் இன்று காலை நடைபெறும் விசேட அணிவகுப்பு மரியாதைக்குப்பின்னர் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுடன் லெப். ஜெனரல் சரத் பொன்சேகா கலந்துரையாடல் நடத்துவார்.

குறிப்பாக தற்போதைய பாதுகாப்பு சூழல் தொடர்பாக தனது முதலாவது உயர்மட்ட அதிகாரிகள் கூட்டத்தில் இவர் ஆராய்வார் எனத் தெரியவருகிறது.

இதன் பின்னர் காலை 11.40 மணியளவில் செய்தியாளர் மாநாடொன்றை லெப். ஜெனரல் சரத்பொன்சேகா நடத்துவார்.

1970ஆம் ஆண்டு (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தாக்குதல் நடத்தியதற்கு எந்தச் சான்றும் கிடைக்கவில்லை!

### கண்காணிப்புக்குழுத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு —

யாழ்.குடாநாட்டில் கடந்த மூன்று நாட்களில் இடம்பெற்ற தாக்குதல்களை விடுதலைப் புலிகளே மேற்கொண்டனர் என்பதை ஏற்றுக்கொள்ளும் வகையில் எவ்வித சான்றும் கிடைக்கவில்லை என இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த மூன்று நாட்களில் 10 தடவைகள் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. 48 மணி நேரத்தினுள் 9 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பல இராணுவத்தினரும் மக்களும் காயமடைந்தனர். இந்தச் சம்பவத்துடன் விடுதலைப் புலி கள் தொடர்பு பட்டிருப்பதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சு!



பருத்தித்துறை —

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி விளையாட்டு மைதானத்தை ஊடறுத்து படையினர் பாரிய மண்அணையை அமைத்துவருவதைக் கண்டித்தும் - மாணவர்கள் மீதான காட்டுமிராண்டித்தனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மீது படையினர் 50 இற்கும் மேற்பட்ட கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மற்றும் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றுக்குச் செல்லும் முன்னரங்க காவலரண் முன்பாக நேற்றுக்காலை 7 மணியிலிருந்து மாணவர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து ஹாட்லிக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரமான கல்விக்கு வழிவிடுமாறு மாணவர்கள் போராட்டத்தில் குதிப்பு!

## குடாநாட்டு வீதிகளில் படையினர் குவிப்பு!

யாழ்ப்பாணம் —

கோண்டாவில் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற படையினர் மீதான தாக்குதலையடுத்து யாழ். குடாநாட்டின் பிரதான வீதிகள் எங்கும் பெருமளவிலான இராணுவத்

# மாணவர்கள் போராட்டத்தில் குதிப்பு!

யாழ்ப்பாணம் —

பாடசாலைகளை ஆக்கிரமித்திருக்கும் - அண்மையில் இருக்கும் இராணுவ முகாம்கள், காவலரண்கள் அகற்றப்பட்டு அச்சுறுத்தலற்ற - சுதந்திரமான கல்விக்கு சிங்கள அரசு வழிவிட வேண்டும் எனக்கோரி மாணவர்கள் இன்றுமுதல் பேராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.

இது தொடர்பாக தமிழ் மாணவர் ஒன்றியம் நேற்று வெளியிட்டிருக்கும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

இராணுவமுள்வேலிக்குள் இருந்து தமது கற்றல் செயற்பாடுகளைத் தொடர்ந்த ஹாட்லிக் கல்லூரி சமூகத்தம் மீதான இராணுவ ஆக்கிரமிப்பை எதிர்த்தும் கடந்த சனியன்று வேலாயுதம் மகா வித்தியாலயம் மற்றும் ஹாட்லி மாணவர்கள் தாக்கப்பட்டு அவர்களது உடைமைகள் பறிக்கப்பட்டதைக் கண்டித்தும் ஹாட்லிக் கல்லூரியின் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று அமைதியாக மறியல்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அதனைக் குழப்பும் வகையில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து 50 இற்கும் மேற்பட்ட கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும் கற்களையும் மாணவர்கள் மீது வீசினர். இந்தச் சம்பவத்தை தமிழ் மாணவர் ஒன்றியத்தினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அமைதியாக ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்கள் மீது அடக்குமுறைகளைப் பிரயோகித்த இராணுவத்தின் மிலேச்சத்தனமான செயல் மாணவர்களை ஆத்திரமூட்டுவதோடு எதிர்காலத்தில் மாணவர்களுடைய பாதுகாப்பிற்கும் கேள்விக்குறியாக அமைகின்றது.

கடந்த பல ஆண்டுகளாக முட்கம்பி வேலிகளுக்குள் எம்மை முடக்கி எம்

(02 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம் —

கோண்டாவில் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற படையினர் மீதான தாக்குதலையடுத்து யாழ். குடாநாட்டின் பிரதான வீதிகள் எங்கும் பெருமளவிலான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

பெருமளவிலான படையினர் முகாம்களில் குவிக்கப்பட்டு வீதிகளின் இரு மருங்கிலும் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருப்பதுடன், ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் பொதுமக்கள் மத்தியில் அச்சமான சூழல் காணப்படுவதோடு, அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபடு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் - படையினர் சந்திப்பு கடைசி நேரத்தில் இரத்து!

யாழ்ப்பாணம் —

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளருக்கும் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதிக்கும் இடையில் நேற்று நடைபெறவிருந்த சந்திப்பு கடைசி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டது.

குடாநாட்டு நிலைமை தொடர்பாக ஆராய யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளருக்கும் யாழ்.படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனுக்கும் இடையில் நேற்று மாலை 4 மணியளவில் சந்திப்பு ஒன்று இடம்பெறவிருந்தது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் முகமாலை இராணுவ சூனியப் பிரதேசத்தில் இந்தச் சந்திப்புக்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும் முகமாலை சூனியப் பிரதேசத்துக்கு வந்திருந்த போதும் - இராணுவத் தரப்பில் எவரும் சமுகமளிக்கவில்லை.

இதுதொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் யாழ். படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனுடன் தொடர்பை ஏற்படுத்தியபோது -

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மக்களே தாக்குதல் நடத்தும் நிலையை படைத்தரப்பினர் உருவாக்குகின்றனர்!

## யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி


யாழ்ப்பாணம் —

குடாநாட்டில் தொடர்ச்சியாக இடம்பெறும் இராணுவ வன்முறைகள் காரணமாக ஆத்திரம் கொள்ளும் பொதுமக்கள் - படையினர் மீது தாக்குதல்களை மேற்கொள்ளும் நிலை உருவாகியிருப்பதாக யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

நேற்று முகமாலையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது -

இந்தச் சந்திப்பில் முக்கியமான விடயங்கள் குறித்து பேசவிருந்தோம். விடுதலைப் புலிகள் யாழ்.மாவட்டத்தை விட்டு வெளியேறிய பின்னர் இராணுவத்தினரதும், இராணுவ ஒட்டுக் குழுக்களதும் கொலைகள், கொலை அச்சுறுத்தல்கள் மிகத் தீவிரமடைந்துள்ளன.

(02 ஆம் பக்கம் பார்க்க)




ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
EXPOAiR
021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com
Your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...


# கொட்டகதெனிய நியமனம்; பொலிஸ் அதிகாரிகள் சீற்றம்!

கொழும்பு—

பொலிஸ் பாதுகாப்புஅமைச்சின் மூத்த ஆலோசகராக முன்னாள் பிரதிப்பொலிஸ்மாஅதிபர் கொட்டகதெனிய நியமிக்கப்பட்டு அவரிடம் பொலிஸ் விவகாரங்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், பொலிஸ் அதிருப்தி அடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின்கீழ் பொலிஸ் கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்வளவு காலமும் அது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழேயே இருந்தது.

பாதுகாப்பு அமைச்சின் பொறுப் பின்கீழ்பொலிஸ்துறை கொண்டு வரப்பட்டதையடுத்து அதன் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் கொட்டகதெனிய நியமிக்கப்பட்டுள்ளார்.

இனவாதக் கடும் போக்காளரான கொட்டகதெனியவை பொலிஸ் விவகாரங்களுக்குப் பொறுப்பானவராக நியமித்ததில் பொலிஸ் தலைமையகத்திலிருக்கும் சில அதிகாரிகளுக்கு உடன்பாடு இல்லை என்றும், அவர்கள் அதிருப்தியில் இருப்பதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையே மக்கள் அமைதிக்காக சேவையாற்றுவதற்குத் தேவையான அதிகாரங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனக்கு வழங்கியிருப்பதாக கொட்டகதெனிய தெரிவித்துள்ளார்.

தான் பொறுப்பேற்ற உடனேயே அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகக் கூறிய அவர் அது எவ்வாறான செயற்பாடு என்பதை அறியத் தர முடியாது என்றும் கூறினார்.

# மூதூர் இறங்குதுறையில் இரண்டு சடலங்கள் மீட்பு!

திருகோணமலை—

மூதூர் பழைய இறங்குதுறைப் பகுதியில் இரண்டு ஆண்களின் சடலங்கள் நேற்று கண்டுபிடிக்கப்பட்டன.

நேற்றுக் காலை 11 மணியளவில் இந்தச் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அவை பொலிஸாரால் மீட்கப்பட்டு அடையாளம் காண்பதற்காக மூதூர் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

தோப்பூரில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின்போது ஐந்து தமிழர்கள் காணாமற்போயிருந்தனர். அவர்களில் இருவரது சடலங்களாக இவை இருக்கலாமென சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - மூதூர் பகுதியில் தொடர்ந்தும் பதற்றநிலை நீடித்து வருகிறது. அங்குள்ள தமிழ் மக்கள் இரவு நேரங்களில் அருகிலுள்ள தேவாலயமொன்றில் சென்று தங்கிவிட்டு மறுநாள் காலை தமது வீடுகளுக்குச் செல்வதாகத் தகவல்கள் தெரிவித்தன. (04)

# பிரபாகரனின் காலக்கெடுவுக்கு அரசு காது கொடுக்கக்கூடாது!

## ஹெல உறுமய தெரிவிப்பு

கொழும்பு—

அமைதிப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்குமாறு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் விடுத்திருக்கும் அறிக்கை தொடர்பாக அரசாங்கம் காதுகொடுக்கத் தேவையில்லை என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகச் செயலாளர் நிசாந்த சிறிவரணசிங்க இதுகுறித்து கூறியதாவது -

அனைத்து அரசியல் கட்சிகளின் ஒருமித்த கருத்துக்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அமைதித் திட்டத்தின்படி அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

புலிகள் இயக்கம் விடுத்திருக்கும் எச்சரிக்கையைத் தொடர்ந்து தன்னிச்சையாக தனது அமைதித்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்கக்கூடாது.

அமைதிப் பேச்சுக்களை உடனே ஆரம்பிக்க வேண்டும். இல்லையெனில் போர்தான் என்று பிரபாகரன் தெரிவித்துள்ளார். இது விடயத்தில் அரசாங்கம் எதிர்வினையாற்றத் தேவையில்லை என்பதுதான் ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடு.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகிந்த சிந்தனைகளில் அனைத்துக் கட்சிகளின் இணக்கப்பாட்டுடன்தான் அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. இந்த அமைதிப் பேச்சுக்களானது ஒற்றையாட்சிக் கோட்பாட்டின் கீழ்தான் இருக்கவேண்டும் என்று மகிந்த சிந்தனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்க் கட்சிகளான ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகியவற்றுடன் அமைதிப் பேச்சுக்களுக்கான செயற் திட்டம் தொடர்பாக அரசாங்கம் கண்டிப்பாக விவாதிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இரு தமிழ் இளைஞர்கள் காலியில் கைது!

கொழும்பு—

காலியில் இரண்டு வெவ்வேறு இடங்களில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இரு தமிழ் இளைஞர்கள் தொடர்பாக விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காலி நகரில் பஸ்தரிப்பு நிலையத்தில் ஒருவரையும், கொஸ்கொட பிரதேசத்தில் மற்றொருவரையும் கைது செய்ததாக தென்மாகாண விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்தது.

காலியில் கைதான சந்தேகநபர் மட்டக்களப்பைச் சேர்ந்தவரெனவும், மேற்படி சந்தேக நபர்கள் எதற்காக காலிக்குச் சென்றனர் என்பது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தென்மாகாண விசேட புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளரும் உதவிப் பொலிஸ் அதிபருமான பிரேமதிலக ஹெட்டியாராச்சி தெரிவித்தார். கொஸ்கொட பிரதேசத்தில் கைதானவரிடம் துப்பாக்கியொன்று இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

## கிழக்கு மாகாணத்திலுள்ள

# முஸ்லிம் பிரதேசங்களில் ஹர்த்தால் அனுஷ்டிப்பு!

மட்டக்களப்பு—

கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று ஹர்த்தால் கடைப்பிடிக்கப்பட்டதால் அந்தப் பிரதேசங்களின் வழமை நிலை முற்றாக செயலிழந்திருந்தது.

காத்தான் குடி பிரதேச செயலாளர் ஏ.எல்.எம் பலீல் படுகொலை உட்பட அண்மைக் காலங்களில் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களை கண்டித்து அம்பாறை மாவட்ட முஸ்லிம் மாணவர் பேரவை உட்பட பல்வேறு அமைப்புகளினால் ஹர்த்தாலுக்கான அழைப்புகள் பள்ளிவாசல்களில் ஒலிபெருக்கி மூலம் விடுக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில்- காத்தான்குடி, ஏறாவூர் மற்றும் ஓட்டமாவடி ஆகிய பிரதேசங்களிலும், அம்பாறை மாவட்டத்தில்- பொத்துவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், சம்மாந்துறை, சாய்ந்தமருது மற்றும் கல்முனை ஆகிய பிரதேசங்களிலும் ஹர்த்தால் கடைப்பிடிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில்- மூதூர் மற்றும் கிண்ணியா ஆகிய பிரதேசங்களிலும் பாடசாலைகள் இயங்கவில்லை அரசாங்க அலுவலகங்கள், கடைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளதோடு, போக்குவரத்துச் சேவைகளும் தடைப் பட்டிருந்தன.

இந்தப் பிரதேசங்களில் தொடரும் அமைதியற்ற சூழ்நிலை காரணமாக பாதுகாப்பும் பாலப்படுத்தப்பட்டுள்ளது.

## மூதூர் இறங்குதுறையில் 4 தமிழ் இளைஞர் கைது!

திருகோணமலை—

மூதூர் கடற்கரைச் சேனையிலிருந்து, மூதூர் இறங்குதுறைக்கு படகொன்றில் சென்ற நான்கு தமிழ் இளைஞர்கள், கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

சத்தியபவன், அருட்செல்வம், ரஜனிகாந்த், அஜிந்தன் ஆகிய நான்கு இளைஞர்களுமே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

இவர்களைக் கைதுசெய்த கடற்படையினர், திருகோணமலைத்துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இவர்கள் நால்வரும் இன்று திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை-திருகோணமலை நகரப் பகுதியிலுள்ள இராணுவ காவரணங்கள் சிலவற்றிலிருந்து இராணுவத்தினர் விலக்கப்பட்டு கடற்படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதுவரை காலமும் திருகோணமலையில் ஒரு பகுதியில் மட்டுமே காவல் கடமையிலிருந்த கடற்படையினர் தற்போது நகரப் பகுதிகளிலும் நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

# புலிகளுக்கான நிதியுதவியை நோர்வே நிறுத்த வேண்டும்!

## இலங்கை அரசு கோருகிறது

கொழும்பு—

நோர்வே அரசாங்கம் விடுதலை புலிகளுக்கு நிதியுதவி அளிப்பதை நிறுத்த வேண்டுமென இலங்கை அரசாங்கம் கோரவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த விவகாரம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் ஏற்கனவே நோர்வேயின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளது. முன்னைய அரசாங்கம் இது தொடர்பாகத் தெரிந்து வைத்திருந்த போதிலும் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

கடந்த மூன்றரை வருடங்களில் 25 மில்லியன் றோனர் நோர்வேயினால் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்டதாக நோர்வேயிலிருந்து வெளிவரும் நியூரும்ஸ் என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இந்நிதியுதவி 2003ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சிலிருந்து விலகும்வரை மேற்கொள்ளப்பட்டது.

விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்படும் நிதியுதவி குறித்து நோர்வே அரசிற்கு நன்கு தெரிந்திருந்ததாகத் தெரிவித்த அந்தப் பத்திரிகை இந்த நிதி எதற்குப் பயன்படுத்தப்பட்டதென்ற விபரம் எதனையும் வெளியிடவில்லை.

# மறியல் போராட்டத்தில்

கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, வட இந்து மகளிர் கல்லூரி, வேலாயுதம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள் உட்பட பெருமளவான மாணவர்கள் சுலோக அட்டைகள், பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து மாணவர்களைச் சமரசம் செய்யும் வகையில் பொலிஸ் அதிகாரிகள் பேச்சுக்கு அழைத்தனர். ஹாட்லிக் கல்லூரி அதிபர் எம். இராஜஸ்காந்தன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர் தலைவர் நான்கு பேரும் இராணுவ முகாமுக்குள் அழைத்துச் செல்லப்பட்டு பேச்சு நடைபெற்றது.

ஆனால், மாணவர்களின் கோரிக்கைகளுக்கு எந்த முடிவும் எட்டப்படாத நிலையில் விரக்தியடைந்த மாணவர்கள் – இராணுவத்தினரை நோக்கி கற்களை வீசினர். இதனையடுத்து இராணுவத்தினர் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தினர்.

இதனால் ஆத்திரம் கொண்ட மாணவர்கள் இராணுவக் காவலரணை நோக்கி மீண்டும் கற்களை வீசினர். இராணுவத்தினரின் கண்மூடித்தனமான கண்ணீர்ப் புகைக்குண்டுத் தாக்குதல்கள் மத்தியிலும் மாணவர்கள் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

கண்ணீர்ப்புகைக்குண்டுகளால் மாணவர்கள் பலர் பாதிக்கப்பட்டபோதும் இராணுவத்தினர் தொடர்ந்தும் கண்ணீர்ப்புகைக்குண்டுகளை ஏவினர்.

இந்தச் சம்பவத்தில் செய்தி சேகரிக்க வந்திருந்த ஊடகவியலாளர் ஒருவர் கண்ணீர் புகைக்குண்டு பட்டதில் கையில் காய மடைந்தார். இதனைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் பதற்றம் நிலவியது. இராணுவ முகாமுக்கு அருகில் வசித்த குடும்பங்கள் சில இடம் பெயர்ந்து சென்றன.

பிற்பகல் ஒரு மணிவரை இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் –

எமது கல்விக்கு இடையூறாக இராதே, மாணவர் சக்தி மாபெரும் சக்தி, போரின் வலியை உணர்ந்தவர்கள் நாங்கள். மீண்டும் எம்முடனா நிழல் யுத்தம், மிதிக்காதே மிதிக்காதே மாணவர்களை மிதிக்காதே, ஈ.பி.டி.பியும் எதிரியும் கூட்டாக கல்விக்கு குழி பறிக்கும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்து, பொறுமையின் எல்லையில் இருக்கும் எம்மை போராட்டத்தினுள் திணிக்காதே, பேரினவாதக் கும்பலே மாணவர்களுக்கு துரோகம் இழைக்காதே, அதிகாரப் பசிக்கு நாமா குட்டிச் சுவர்கள் ஆகிய வாசகங்கள் எழுதப் பட்ட சுலோக அட்டைகளை தாங்கியிருந்தனர். (12) (13) (14)

# மக்களே தாக்குதல்...

இவற்றைக் கட்டுப்படுத்துமாறு போரிநிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

எனினும், இந்தப் படுகொலைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் சூழ்நிலையில் எமது மக்கள் மற்றும் தேசப்பற்றாளர்கள் கொல்லப்படுவது - அவர்கள் மீது மேற்கொள்ளப்படும் கொலை வன்முறைகள் உடன்நிறுத்தப்படவேண்டும்.

இவ்வாறான படுகொலைகள் நிறுத்தப்படுமானால் மக்கள் கிளர்ந்தெழுந்து அதற்கான எதிர்ப்பு நடவடிக்கைகள், ஜனநாயக வழிமுறையிலான போராட்டங்களில் ஈடுபடமாட்டார்கள்.

எனவே, இது அரச கட்டுப்பாட்டுப் பிரதேசமாக உள்ளதால் இந்தப் படுகொலைகள் இடம்பெறாமலிருக்கும் வகையில் அதற்கான உறுதிப்பாட்டை படைத்தரப்பு வழங்க வேண்டும் என்பன போன்ற விடயங்களை படைத்தரப்புக்குத் தெரியப்படுத்துவதாக இருந்தோம். இதற்கான உறுதிப்பாட்டை எடுப்பதும் எங்களுடைய முக்கியமான நோக்கமாக இருந்தது.

நேற்றுமுன்தினம் கோண்டாவில் பகுதியில் தாக்குதல் சம்பவம் ஒன்று நடந்ததாக கண்காணிப்புக் குழுவினர் நேற்றுத் தெரிவித்தனர். இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் உங்களுக்கும் ஏதாவது தொடர்புண்டா என்றும் கேட்டிருந்தார்கள்.

அதற்கு நாம் - யாழ். குடாநாட்டில் எந்தவொரு விடுதலைப் புலி உறுப்பினர்களும் இல்லை. இவ்வாறு இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்த வேண்டிய அவசியமும் இல்லை. நாங்கள் இந்தத் தாக்குதலை நடத்தவில்லை என திட்டவட்டமாகத் தெரிவித்ததோடு, இந்தச் சம்பவத்துக்கு எந்தவிதத்திலும் காரணமில்லை எனத் தெரிவித்துள்ளோம்.

ஆனால், குடாநாட்டில் இராணுவ வன்முறைகள் தொடர்ச்சியாக அதிகரிப்பதைக் கண்டு ஆத்திரமடைந்துள்ள மக்கள் இதனை மேற்கொள்வதற்கான சூழல் உருவாகியிருக்கிறது.

இவ்வாறான சம்பவத்தின் வெளிப்பாடாகத்தான் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் மீதான இராணுவ வன்முறைகளைப் பார்க்கிறோம்.

எனவே, மக்களைப் பாதிக்கும் - அவர்களுடைய உயிர்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் எந்தவொரு சம்பவமும் ஏற்படாமல், இயல்பாகவே மக்களுடைய பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கேட்டுள்ளோம். மீண்டும் ஒருமுறை படைத்தரப்பைச் சந்திக்க வாய்ப்பு உருவாகுமாஎன கண்காணிப்புக்குழுவினர் கேட்டிருக்கிறார்கள்.

அதற்கு நாங்கள் - ஏற்கனவே நாம் எமது தலைமைப்பீடத்தின் முடிவின்படிதான் சந்திப்புக்கு வந்து இங்கு காத்துக்கொண்டிருந்தோம்.

அதாவது, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஊடாக இராணுவம் இந்தச் சந்திப்புக்கு அழைத்தது. ஆனால், இந்தச் சந்திப்பை திடீரென அவர்களே நிறுத்தியிருக்கின்றனர். அந்த அடிப்படையில் கண்காணிப்புக் குழுவின் இந்த வேண்டுகோளை தலைமைப்பீடத்துக்குத் தெரியப்படுத்துவோம். தலைமைப்பீடத்தின் முடிவின்படி நாம் செயற்படுவோம் எனத் தெரிவித்தோம் என்றார்.

# சுதந்திரமான கல்விக்கு...

சந்ததியின் கல்வி நிலையை வீழ்ச்சியடைய வைக்கின்ற கபட நோக்கத்தோடு செயற்பட்டுவரும் இராணுவத்தினரின் செயற்பாடுகளுக்கு எதிராக மாணவர்கள் தொடர்ச்சியான வலியுறுத்தல்களை விடுத்தும் போராட்டங்களை நடத்தியும் தங்களை சுதந்திரமாகக் கற்க விடுமாறு கோரினர்.

ஆனால் அதற்கு சிறிதும் செவிசாய்க்காத சிங்கள அரசும் இராணுவமும் மேலாக சர்வதேச நாடுகளும் வாய்பொத்தி இருப்பதையே கண்டு வந்தோம். எனினும் எமக்கான நீதி கிட்டும் என்ற நிலையில் நாங்கள் அமைதி வழியில் போராட்டம் நடத்தி னோம்.

இன்று நடந்த மிலேச்சத்தனமான நிகழ்வு மாணவர்கள் அமைதிப் போராட்டம் நடத்துவதில் பிரயோசனமில்லை என்பதை எடுத்துக் காட்டி நிற்பதோடு தொடர்ச்சியான போராட்டங்களை மேற்கொண்டு சுதந்திரமான கல்விச் செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கான உந்து சக்தியாகவும் உள்ளது.


இனிவரும் நாட்களில் மாணவர்களாகிய நாங்கள் தொடர்ச்சியாக மறியற் போராட்டங்களை குடாநாடு எங்கும் விஸ்தரித்து எம்மீதான ஆக்கிரமிப்பை உடைத்தெறிவோம் என உறுதிகொண்டு மாணவர்களாகிய நாம் எமது போராட்டத்தினைத் தீவிரப்படுத்தவுள்ளோம்.

எமது பாடசாலைகளை ஆக்கிரமித்திருக்கும், அண்மித்திருக்கும் இராணுவ முகாம்கள், காவலரண்கள் அகற்றப்படுவதோடு அச்சுறுத்தல்கள் எவையுமற்ற சுதந்திரமான கல்விக்கு சிங்கள அரசும் இராணுவமும் வழிவிடல் வேண்டும்.

இந்தக் கோரிக்கையோடு இன்று வடமராட்சிப் பகுதியில் எமது போராட்டத்தை ஆரம்பிக்கிறோம்.

எமது பகிரங்க கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு இன்று மாலைக்கு முன் சரியான பதிலை இராணுவத்தரப்பு தர மறுக்குமானால் அடுத்து வரும் நாட்களில் மாணவர்களாகிய நாங் கள் எமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை ஏனைய பிரதேச மாணவர்களையும் ஒன்றிணைந்து கல்விச் செயற்பாடுகள் அரச பணிகள் என்பவற்றை முடக்கி பேராடுவோம் என்பதையும் வலியுறுத்திக் கூறுகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இனிவரும் யுத்தத்தை புலிகளுடன் மக்களும் இணைந்தே நடத்துவர்!



## ஜெயானந்தமூர்த்தி எம்.பி தெரிவிப்பு

பாரிஸ்

இனிவரும் யுத்தத்தில் விடுதலைப் புலிகள் மட்டும் பங்கேற்கப்போவதில்லை, ஒட்டுமொத்த தமிழ் மக்களுமே நடத்தப் போகிற யுத்தமாகவே அது இருக்கும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்த மூர்த்தி தெரிவித்தார்.

பிரான்சில் நடைபெற்ற மாவீரர் நாள் விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

கிழக்குப் பிரதேசத்தில் போராளிகளும், மக்களும் பல பிரச்சினைகளைச் சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள்.

கொழும்பில் இறங்கிய பிறகு எனது நிலைமை என்னவாகும் என்பது உங்களுக்குத் தெரியும். அமைதி, அமைதி என்று கூறப்பட்ட இந்தக் காலத்தில்தான் பொதுமக்களும், போராளிகளும் பாரிய அளவில் கொல்லப்பட்டுள்ளார்கள். தாயகத்திலே நிழல் யுத்தம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவு பல படுகொலைகளைச் செய்து கொண்டிருக்கிறது. மட்டக்களப்பு, அம்பாறையில் சிறப்பாக செயற்பட்டு வந்த கௌசல்யன் உள்ளிட்ட போராளிகளைப் படுகொலை செய்தது அரசும் புலனாய்வுத்துறையும் தான். இந்தப் படுகொலைகள் மூலம் மக்களை அச்சுறுத்தி, பிளவுபடுத்திவிடலாம் என்று எண்ணினார்கள்.

ஆனால், மாறாக மக்கள் ஒன்றுபட்டு நிற்கிறார்கள். பிரதேசவாதம் உள்ளிட்ட எந்த சூழ்ச்சியாலும், சக்தியாலும், குழப்பத்தாலும் மக்களை என்றுமே பிரித்துவிட முடியாது.

வடக்கு - கிழக்கில் வாழுகிற தமிழ் மக்கள் அனைவருமே விடுதலைப் புலிகளுக்குப் பின்னால் எங்களுடைய தலைவரின் கீழ் ஒன்றுபட்டு ஒற்றுமையாகவே நிற்கிறார்கள்.

கடந்த 25 ஆண்டுகாலமாக நமது போராட்டம் எந்த இலக்கை நோக்கி நடைபெறுகிறதோ, அந்த இலக்கை நாம் நிச்சயமாக அடைவோம்.

தமிழீழமே எமது இறுதி மூச்சு என்று போராடிய மாவீரர்கள் அந்தத் தமிழீழத்தைப் பார்ப்பதற்காகவே கல்லறைகளிலே உறங்கிக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள் என்றும் மரணிக்கப் போவதில்லை.

எதிர்கால தலைமுறையின் சுதந்திரமான, நிம்மதியான வாழ்வுக்காகவே பதினெட்டாயிரம் போராளிகள் உயிரிழந்துள்ளனர்.

நாங்கள் இன்னும் சிறிலங்கா இராணுவத்துக்கும் அரசுக்கும் அடிபணிய வேண்டுமா? அவர்களிடம் நாங்கள் பிச்சையெடுக்க வேண்டுமா?

நாங்கள் எங்கள் உரிமைகளுக்காக யாரிடமும் மண்டியிடத் தேவையில்லை.

எங்களுடைய மண் எமக்கு வேண்டும் என்று உரத்துக் கூறி வருகிறோம்.

எங்களுடைய நிலத்தில் நாங்கள் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் எமது அரசை அமைத்து வாழ்வதற்கு, சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும். சர்வதேச சமூகம் அதைப் பெற்றுத்தர வேண்டும் என்று நாம் பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்தோம்.

ஆனால், செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் எமது வேண்டுகோளை சர்வதேச சமூகம் அணுகியிருக்கிறது. எமது உரிமைகளைப் பெற்றுத்தருவதில் சர்வதேச சமூகமும் பின்னடிப்பதாகவே நான் கருதுகிறேன். இது தொடர்பாக நாங்கள் மிகவும் வேதனையடைகிறோம். கவலையடைகிறோம்.

மீண்டும் மீண்டும் பேச்சுவார்த்தை என்று கூறி இழுத்தடிப்பதில் பயனேதும் இல்லை.

மகிந்த ராஜபக்ஷவுக்கு ஒரு குறுகியகால அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சர்வதேச நாடுகளுக்கும் நாம் கோரிக்கை விடுத்திருக்கிறோம். ஆனால், சர்வதேச சமூகமோ எங்களை ஏறெடுத்தும் பார்ப்பதாக இல்லை.

ஆகவே நாம் இறுதியாகச் செய்யவேண்டியது நாம் நமது சுதந்திரப் போராட்டத்தைத் தொடங்கவேண்டியதுதான்.

எங்களுடைய தாயகத்தை மீட்டெடுத்து சிறிலங்கா அரசாங்கத்திலிருந்து பிரிந்து வாழ்வதைத் தவிர வேறு வழியே இல்லை என்பதை நமது போராட்டத்தின் மூலம் உலகுக்குத் தெரிவிப்போம் எனவும் அவர் கூறினார்.

# நாடாளுமன்றக் கலைப்பிற்கு ஜே.வி.பி கட்சி கடும் எதிர்ப்பு!



கொழும்பு

நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்தும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் திட்டத்துக்கு ஜே.வி.பியும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவானதைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை பெற்றுக் கொள்ளும் வகையில் பொதுத் தேர்தலை நடத்த முயன்று வருகிறார்.

மகிந்த ராஜபக்ஷவினது இந்த நடவடிக்கையை ஜே.வி.பி கடுமையாக எதிர்த்து வருகிறது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தி அதில் வெற்றி பெற வேண்டியது அவசியம் என்று ஜே.வி.பி வலியுறுத்தி வருகிறது.


உள்ளூராட்சி அமைப்புக்களில் பெரும்பான்மை இடங்களை தற்போது ஐக்கிய தேசியக் கட்சி தம் வசம் வைத்துள்ளது.

இந்த நிலையை மாற்றி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அதிக இடங்களைப் பெற்று அரசாங்கத்தின் செயற்பாடுகளை அடிமட்ட மக்கள் வரைக்கும் கொண்டு சென்ற பின்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தலாம் என்று ஜே.வி.பி ஆலோசனை கூறிவருகிறது.

இருப்பினும், அடுத்தாண்டு மத்தியில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான திட்டமிடல்களை மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்டுவருவதாக ஜனாதிபதி மகிந்தவின் ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

# இலங்கைக்கு இந்தியா உதவுவது தமிழினத்துக்கு செய்யும் துரோகம்

## வைகோ தெரிவிப்பு



சென்னை

இலங்கையில் போர் மூளுமானால் இலங்கை அரசுக்கு இந்தியா உதவுவது தமிழ் இனத்துக்குச் செய்யும் துரோகம் என்று ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார்.

தமிழ்நாட்டிலிருந்து வெளியாகும் நக்கீரன் - வாரம் இருமுறை இதழின் கேள்வி பகுதியில், யுத்தம் நோக்கிச் செல்லும் இலங்கையில் அரசுக்கு ஆதரவாக இந்திய அரசு செயற்படுமா என்ற கேள்விக்கு வைகோ அளித்துள்ள பதிலில் -

கடந்த அரை நூற்றாண்டு காலமாக இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய இனத்தை சிங்களப் பேரினவாத அரசுகள் கொடுமையாக வஞ்சித்து வந்துள்ளன. ஈழத்தமிழர்களுக்கு உண்டான அடிப்படையான உரிமைகளைக்கூட அடியோடு மறுத்து இனப்படுகொலைக்கு ஆளாக்கும் சிங்களப் பேரினவாதத்தின் பிரதிநிதியாகவே மகிந்த ராஜபக்ஷ சிங்கள வெறியர்களின் கட்சிகளோடு கூட்டணி அமைத்து ஜனாதிபதியாகி இருக்கிறார்.

போர் மேகங்கள் சூழ்வதாகவே எனக்குத் தோன்றுகிறது. போர் மூளுமானால் இலங்கை அரசுக்கு இந்திய அரசு எவ்விதத்திலும் உதவக் கூடாது. உதவுமானால், அது தமிழ் இனத்துக்குச் செய்யும் துரோகம் ஆகும். அதனால் அப்படி ஒரு தவறை இந்தியா செய்யாது என்றே நம்புகிறேன் என்று வைகோ கூறியுள்ளார்,

# ரி.ரி.என் தமிழ் ஒளிபரப்பு சேவையை தடைசெய்யுமாறு சந்திரிகா கோரிக்கை



கொழும்பு

பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் இருந்து ஒளிபரப்பாகும் தமிழ்த் தொலைக்காட்சியான ரி.ரி.என் தமிழ் ஒளிபரப்பு சேவையைத் தடைசெய்யுமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பிரான்ஸை வேண்டியுள்ளார். இந்தச் செய்தியை பிரான்சில் இருந்து வெளியாகும் 'லபிகாரோ' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் சந்திரிகா பிரான்ஸ் சென்று அந்த நாட்டின் ஜனாதிபதி ஜாக் சிராக்கை சந்தித்து உரையாடிய போதே இந்த வேண்டுகோளை, பிரான்ஸ் அதிபரிடம் அவர் விடுத்துள்ளார். இதன்பின் ரி.ரி.என் தொலைக்காட்சிக்கெதிராக பாரிசில் உள்ள இலங்கைத் தூதர் கடந்த ஜூலை 7 ஆம் திகதி வழக்கொன்றையும் தொடுத்துள்ளார்.

ரி.ரி.என் தொலைக்காட்சியானது ஐரோப்பா எங்கும் தமிழ் மக்களின் கலை, பண்பாட்டு, சமூக விழுமிய கருத்துகளைப் பேணும் தமிழ்த் தொலைக்காட்சி என்பதுடன், ஐரோப்பா வாழ் தமிழ் மக்களின் பேரபிமானத்தைப் பெற்ற ஒரேயொரு தொலைக்காட்சி என்பதும் குறிப்பிடத்தக்கது.

# யாழ்.தாக்குதல் குறித்த விசாரணை; மூவர் கொண்ட குழு நியமனம்?

## ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு

யாழ்ப்பாணத்தில் தொடரும் இராணுவத்தினர் மீதான தாக்குதல் குறித்து விசாரணை நடத்த மூவர் கொண்ட குழுவை ஜனாதிபதி மஹிந்த நியமித்துள்ளார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த 2002 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒரே தாக்குதலில் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளது இதுவே முதல் முறை என்று அரசாங்கம் கருதுவதால் இந்த விசாரணைக் குழு நியமிக்கப்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் யாழ்ப்பாண நிலைமைகள் மற்றும் கிழக்கு சம்பவங்கள் குறித்து முப்படைத் தளபதிகள் மற்றும் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜோன் குணரட்ண ஆகியோருடன் நேற்றுமுன்தினம் மாலை மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை நடத்தியுள்ளார்.

இதனிடையே 6 படையினரது இறுதி நிகழ்வுகள் நடைபெறும் பகுதிகளில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது..


# மங்களவின் மக்கள் தொடர்பு அதிகாரியாக நடிகை

கொழும்பு

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் பொதுமக்கள் தொடர்பு அதிகாரியாக நடிகை அனார்கலி ஆகாசா நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறந்த நடிகைக்கான சரசவிய விருது அண்மையில் நடிகை அனார்கலிக்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எதிர்வரும் 27 ஆம் திகதி மகிந்த இந்தியா பயணம்!



கொழும்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர் வரும் 27 ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இதன்போது தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதான முனைப்புகள் தொடர்பாக பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து இந்திய தலைவர்களுடன் பேச்சு நடத்தவுள்ளார்.

ஏற்கனவே எதிர்வரும் 10 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொள்ளவிருந்தார்.

இதேவேளை, நோர்வே தொடர்ந்தும் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் ஏற்பாட்டாளராக செயற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட நிலையில் இந்திய அரசாங்கத்தின் ஆசீர்வாதம் இந்த ஏற்பாட்டு நிலைக்கு கிடைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# சந்திரிகா எம்.பியாக அஸ்கிரிய பீடாதிபதி எதிர்ப்பு

கொழும்பு

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு அஸ்கிரிய பீடாதிபதி உடுகம சிறி புத்தரகித்தர நாயக்க தேரர் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

சந்திரிகாவின் இந்த முயற்சி - தான் முன்னர் வகித்த ஜனாதிபதி பதவிக்கு இழுக்கை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர்களின் செயலாளர்கள் அஸ்கிரிய பீடாதிபதியைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

# திருமலை புத்தர் சிலைக்கான பாதுகாப்பை விலக்க கோரிக்கை

திருகோணமலை

திருகோணமலை திடீர் புத்தர்சிலைக்கு அளிக்கப்படும் இராணுவத்தினது பாதுகாப்பை விலக்கிக்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு - தமிழ் இளைஞர் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

திடீர் புத்தர்சிலையை வணக்கத் தலமாகக் கருதினால் அதற்கு பொலிஸ் பாதுகாப்பு அளிக்கலாமேதவிர, இராணுவத்தைக் குவிக்கக்கூடாது என்றும், பனியக்கன் பிரதேசத்துக்கான பொருளாதாரத் தடையை நீக்கவேண்டும் என்றும் அந்த அமைப்பு மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் நகல்கள் இந்தியா, சீனா, ஜப்பான் மற்றும் அமெரிக்க பிரதிநிதிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் தொடர்பாக பரிசீலித்து வருவதாக அரச செயலகம் தெரிவித்துள்ளது.

# சென்னை டெஸ்ட் போட்டி நேற்று மாலை ஆரம்பம்!



சென்னை

சென்னையில் கொட்டித் தீர்த்த மழையினால் 3 நாட்கள் தடைப்பட்ட இந்திய - இலங்கை அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டி நேற்று பிற்பகல் சேப்பாக்கம் மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. காம்பீரும், ஷேவாக்கும் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர்.

ஷேவாக் அதிரடியாக ஓட்டங்களைக் குவிக்க, எதிர்முனையில் நின்ற காம்பீர் பெரிதும் தடுமாறிக் கொண்டிருந்தார். ஸ்கோர் 13ஆக இருந்தபோது - காம்பீர் சமிந்த வாஸின் பந்துவீச்சில் போல்டாகி பவிலியன் திரும்பினார். 7 பந்துகளை எதிர்கொண்ட இவர் ஒரு ஓட்டத்தைக்கூட எடுக்கமுடியாமல் ஆட்டமிழந்தார்.

அடுத்து ராவிட் களமிறங்கினார். ஷேவாக் தொடர்ந்தும் பவுண்டரிகளாக விளாசி தனது ஸ்கோரை வேகமாக உயர்த்தினார். ஆனால், அணியின் ஸ்கோர் 45ஐ எட்டிய போது - வாஸின் பந்தில் அத்தபத்து



விடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இவர் 28 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் 36 ஓட்டங்களை எடுத்திருந்தார்.



அடுத்து ராவிட்டுடன், டெண்டுல்கர் களமிறங்கினார். இருவரும் மிகமிக மெதுவாகவே ஓட்டங்களை எடுத்தனர். இதனால் அணியின் சராசரி ஓட்டத்தில் சரிவு ஏற்பட்டது. 32.3 ஓவர்களில் போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. அப்போது இந்திய அணி 2 விக்கெட் இழப்புக்கு 90 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ராவிட் 95 பந்துகளில் 30 ஓட்டங்களையும், டெண்டுல்கர் 69 பந்துகளில் 11 ஓட்டங்களையும் எடுத்த நிலையில் ஆட்டமிழக்காமல் இருந்தனர். போட்டியின் இறுதி நாள் இன்று என்பதால் இது வெற்றி தோல்வியின்றி முடிவடையும் என்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்

யாழ்.கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் தலைமையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

(100)

# காண்பூர் டெஸ்ட் போட்டி அகமதாபாத்துக்கு மாற்றம்

மும்பை

இந்திய - இலங்கை அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி கான்பூரில் இருந்து அகமதாபாத்துக்கு மாற்றப்பட்டிருக்கிறது.


இந்தப் போட்டி எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 22ஆம் திகதிவரை நடைபெறும். மும்பையில் நேற்றுமுன்தினம் கூடிய இந்திய கிரிக்கெட் சபையின் சுற்றுப்பயண அமைப்புக்குழு கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

அதேவேளை, அகமதாபாத்தில் நடப்பதாக இருந்த இந்திய - இங்கிலாந்து டெஸ்ட் போட்டி மொஹாலிக்கு மாற்றப்படும். அதே சமயம் மொஹாலியில் நடக்கவிருந்த இந்திய - இங்கிலாந்து ஒருநாள் போட்டி ஜாம்ஷெட் பூரில் நடக்குமென்றும் அறிவிக்கப்பட்டது.

இங்கிலாந்து அணி இந்திய சுற்றுப்பயணத்தின்போது மும்பை, நாக்பூர் மற்றும் மொஹாலியில் டெஸ்ட் போட்டிகளில் விளையாடும். மூன்று டெஸ்ட் போட்டித் தொடரின் முடிவில் 7 போட்டிகள் கொண்ட ஒருநாள் போட்டித் தொடர் நடைபெறும்.

இந்தப் போட்டிகள் இந்தூர், கோவா, டெல்கி, கௌகாட்டி, கொச்சி, பரிதாபாத், ஜாம்ஷெட்பூரில் நடக்கவுள்ளன. இங்கிலாந்து தொடருக்கான போட்டி அட்டவணை இன்று அறிவிக்கப்படும்.

# ஸ்ரரஸுக்கு ஆண் குழந்தை நாளை அணிக்குத் திரும்புவார்



லண்டன்


இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் ஸ்ரரஸின் மனைவி ஆண் குழந்தையைப் பெற்றெடுத்ததையடுத்து - அவர் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்யும் தனது அணியுடன் மீளவும் இணையவுள்ளார்.

இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் ஸ்ரரஸின் மனைவிக்கு கடந்தவாரம் குழந்தை பிறக்குமென எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இதனால், அவர் லாகூரில் இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3ஆவது கிரிக்கெட் போட்டியில் பங்கேற்காமல் லண்டன் சென்றிருந்தார். நேற்றுமுன்தினம் இரவு ஸ்ரரஸின் மனைவிக்கு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு சாமுவேல் டேவிற் என பெயரிடப்பட்டுள்ளது. இதையடுத்து ஸ்ரரஸ் இன்று பாகிஸ்தான் திரும்பி அணியில் மீண்டும் இணைந்துகொள்ளவுள்ளார்.

இங்கிலாந்து அணி நாளை பாகிஸ்தான் ஏ அணிக்கெதிரான பயிற்சி போட்டியொன்றில் பங்கேற்கவுள்ளது. இதையடுத்து 5 ஒருநாள் போட்டிகளில் பாகிஸ்தான் அணியுடன் இங்கிலாந்து பங்கேற்கும். இப்போட்டிகளில் ஸ்ரரஸ் விளையாடுவதற்காகவே பாகிஸ்தான் திரும்பவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு

# பாகிஸ்தான் ஒருநாள் தொடர்; வோண் ஆடுவது சந்தேகம்!



லாகூர்

பாகிஸ்தான் அணிக்கு எதிராக விளையாடவுள்ள இங்கிலாந்து அணியில் மைக்கல் வோண் இடம்பெறுவாரா என்பது குறித்து சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக இங்கிலாந்து அணியின் கப்டன் மைக்கல் வோண் - பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் பங்கேற்கவில்லை. எனினும், தொடர்ந்து நடைபெற்ற இரு போட்டிகளிலும் இவர் சிறப்பாக ஆடவில்லை.

இந்த நிலையில் நேற்று முழங்கால் சிகிச்சை நிபுணர் ஒருவரிடம் மைக்கல் வோண் பரிசோதனை நடத்தினார். இதன்போதே இவரது முழங்காலில் பிரச்சினைகள் இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து மைக்கல் வோண் ஓய்வெடுக்கவேண்டுமென வைத்திய நிபுணர் ஆலோசனை கூறியுள்ளார். இதனால் எதிர்வரும் சனிக்கிழமை லாகூரில் ஆரம்பமாகவுள்ள ஒருநாள் போட்டித் தொடரில் இவர் பங்கேற்பாரா என்பது சந்தேகமாக உள்ளது.

இதனால் மைக்கல் வோண் இந்தப் போட்டிகளில் பங்கேற்காவிடின் இவருக்குப் பதிலாக இயன் பெல் களமிறங்குவார்.

இங்கிலாந்து அணி -


மைக்கல் வோண் அல்லது இயன் பெல், அன்டர்சன், கொலிங்வூட், பிளின்ரொப், ட்ரெஸ்கொதிக், மற்பிரியர், சோலங்கி, ஸ்ரரஸ், உடல், கபீர் அலி, பிளக் வெல்.

# அவுஸ்ரேலிய சுற்றுப் பயணத்தில் காயம் காரணமாக கலிஸ் விலகல்

சிட்னி

அவுஸ்ரேலியாவில் சுற்றுப்பயணம் செய்யும் தென்னாபிரிக்க அணியிலிருந்து கலிஸ் விலகவுள்ளார். முழங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாகவே இவர் இப்போட்டிகளிலிருந்து விலகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தியாவில் நடைபெற்ற போட்டிகளின்போது - தென்னாபிரிக்க அணியின் சகலதுறை ஆட்டக்காரரான கலிஸ் காயமடைந்தார். இடது முழங்கையில் இவருக்கு ஏற்பட்ட காயம் தொடர்பாக அவுஸ்ரேலியாவின் பேர்த் வைத்தியசாலையில் ஸ்கான் செய்து பார்க்கப்பட்டபோதே மேலும் சிகிச்சையளிக்கப்படவேண்டுமென வைத்தியர்கள் தெரிவித்தனர்.



இதையடுத்தே இவர் அணியிலிருந்து விலகவுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை மேற்கு அவுஸ்ரேலிய அணிக்கு எதிராக ஆரம்பமான 3 நாள் ஆட்டத்தில் இவர் பங்கேற்கவில்லை.

இதேவேளை, தென்னாபிரிக்க அணியின் தலைவர் கிரேம் சிமித்தும் பயிற்சிப் போட்டியின்போது சிறு காயத்துக்குள்ளானார். இவரது வலது கைவிரல் ஒன்றிலேயே காயமேற்பட்டிருக்கின்றபோதும் - முறிவு எதுவும் ஏற்படவில்லையெனவும், ஓய்வு எடுத்துக்கொள்ளுமாறும் வைத்தியர்கள் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

அவுஸ்ரேலிய அணியுடனான டெஸ்ட் போட்டி எதிர்வரும் 16ஆம் திகதி தொடங்கவுள்ள நிலையில் சிமித் மற்றும் கலிஸ் ஆகியோர் விளையாட முடியாத நிலை ஏற்பட்டால், விக்கெட் காப்பாளர் மார்க் பௌச்சர் அணித் தலைவராக செயற்படுவாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானின் தொடர் வெற்றி; பொப் வூல்மர் பெரு மகிழ்ச்சி!

லாகூர்

இங்கிலாந்து அணிக்கு எதிரான 3 டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடரில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது குறித்து அணியின் பயிற்சியாளர் பொப் வூல்மர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தைச் சேர்ந்த வூல்மர், 2004 ஜூனில் பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளராக நியமனம் செய்யப்பட்டார். அதன்பின்னர் பாகிஸ்தான் அணி பெறும் முதல் டெஸ்ட் தொடர் வெற்றி இங்கிலாந்துக்கு எதிரானது என்பது குறிப்பிடத்தக்கது.

லாகூரில் சனிக்கிழமை முடிவுற்ற 3ஆவது டெஸ்ட் போட்டியில் ஓர் இனிங்ஸ் மற்றும் 100 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணியைத் தோற்கடித்தது பாகிஸ்தான்.

இந்த முடிவால், பாகிஸ்தான் அணியின் கப்டன் இன்சமாமைக் காட்டிலும் அதிகம் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார் பயிற்சியாளர் பொப் வூல்மர். ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் மேலும் குறிப்பிட்டதாவது -

இங்கிலாந்துக்கு எதிரான தொடர்



வெற்றியை சிறந்த சாதனையாகவே கருதுகிறேன். அதற்காக, பாகிஸ்தான் வீரர்கள் மிகவும் கஷ்டப்பட்டு தங்களை தயார்படுத்திவந்தனர். எனக்கும் அந்தத் தொடர் வெற்றி சிறப்பான அம்சமாக அமைந்துள்ளது.

திடீரென எழுந்துவரும் பந்தை எப்படி எதிர்கொள்வது, ஜோடியாக எப்படியாக சிறப்பாக ஆடுவது போன்ற மிகச் சிறிய விடயங்களில்கூட நாங்கள் அதிகமாகக் கவனம் செலுத்தியதால் இங்கிலாந்துக்கு எதிரான தொடரை வெல்ல முடிந்தது.

வலுவான இங்கிலாந்து அணிக்கு எதிராக இந்த வெற்றி அமைந்தாலும், அதையே எதிர்வரும் ஆட்டங்களுக்கும் தைரியமாகக் கொள்ளமுடியாது.

இந்தியாவுடன் 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் பாகிஸ்தான் விளையாடவுள்ளது. அந்தத் தொடர் பாகிஸ்தான் வீரர்களுக்கு மிகவும் சவாலானதாக இருக்கும்.

இந்திய அணியில் சிறந்த வீரர்கள் பலர் உள்ளனர். ஆதலால், அதற்கேற்ற வகையிலான அணியைத் தயார் செய்யவேண்டியது அவசியம் என்றார் வூல்மர்.

இங்கிலாந்துக்காக 19 டெஸ்ட்களில் விளையாடியுள்ளார் வூல்மர். பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளராக நியமனம் செய்யப்படுவதற்கு முன்பாக தென்னாபிரிக்க அணிக்கு 5 ஆண்டுகள் பயிற்சியாளராக இருந்தார்.

அடுத்து இங்கிலாந்துடன் 5 ஒருநாள் போட்டிகளில் பாகிஸ்தான் அணி விளையாடவுள்ளது.

# புனே மரதன் போட்டியில் கென்ய வீரர் முதலிடம்!



புனே

புனேயில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 2ஆவது சர்வதேச மரதன் போட்டியில், கென்யாவைச் சேர்ந்த ஜோஸ்பாட் டேதி ஆண்கள் பிரிவில் முதலிடம் பெற்றார்.

மகளிர் பிரிவில், ரஷ்யாவைச் செர்ந்த நயில்யா யுலமனேவ் மகுடம் சூடினார். 42.195 கிலோ மீற்றர் தூரத்தை 2 மணி 19.35 நிமிடங்களில் கடந்து முதலிடம் பெற்றார் டேதி. அவருக்கு 1.5 லட்சம் இந்திய ரூபா வழங்கப்பட்டது.

ஜெமக் கெபடே (எதியோப்பியா) இரண்டாம் இடத்தையும், அம்புரோஸ் மகாவு (கென்யா) மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

ரஷ்யாவைச் சேர்ந்த நயில்யா யுலமனோவ் 1 மணி 15 நிமிடங்களில் 21 கிலோ மீற்றர் தூரத்தை எட்டி, மகளிருக்கான போட்டியில் முதலிடம் பெற்றார். அவருக்கு 1 லட்சம் இந்திய ரூபா ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

ஜாய்ஸ் காண்டியா (கென்யா) 2ஆம் இடத்தையும், தெரிங்கோ ஜெலாச்சூ (எதியோப்பியா) 3ஆம் இடத்தையும் பெற்றனர்.

இந்தியத் தரப்பில், ஜெயாபாய் தத்தாத்ரேயா ஆண்கள் பிரிவிலும், குர்னுலே மாதுரி மகளிர் பிரிவிலும் முதலிடம் பெற்றனர். அவர்களுக்கு தலா 1 லட்சம் இந்திய ரூபா வழங்கப்பட்டது.

# இராணுவத்தின் கெடுபிடிகள் அதிகரித்தால் மக்கள் கிளர்ந்தெழும் நிலை உருவாகும்!

## யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர்



யாழ்ப்பாணம் —

தமிழ் மக்கள் மீது இராணுவத்தினர் தொடர்ந்தும் தாக்குதல் மற்றும் சோதனைக் கெடுபிடிகளை அதிகரித்தால், அவர்கள் ஆத்திரமடைந்து கொதித்தெழுவதை தவிர்க்கமுடியாது என யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் மக்கள் மீது இராணுவத்தினரும், அவர்களுடன் இணைந்து செயற்படும் ஆயுதக்குழுவினரும் மேற்கொண்டுவரும் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக தமிழ் தேசிய தொலைக்காட்சிக்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

யாழ்.குடாநாட்டில் மக்கள் மீது இராணுவத்தினரும் அவர்களுடன் இணைந்து செயற்படும் ஆயுதக்குழுவினரும் தாக்குதல்களை நடத்திவருகின்றனர். இதனால் மக்கள் கொதிப்படைந்து வன்முறைகளில் ஈடுபடவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதன்போதும் தாக்குதல் சம்பவங்கள் நடைபெறும் வேளைகளிலும் இராணுவத்தினரின் தாக்குதலுக்கு இலக்காகி வருகின்றனர்.

இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் குண்டாந்தடி பிரயோகத்தின் போது பத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். சிலர் இதுவரை வைத்தியசாலைக்கு அச்சம் காரணமாக செல்லாதுள்ளனர்.

மக்கள் மீது இராணுவத்தினர் இவ்வாறான தாக்குதலில் ஈடுபட்டால், மக்கள் இன்னும் இன்னும் கொதிப்படையும் சூழ்நிலை ஏற்படும்.

இவ்வாறான நிலைமைகள் ஏற்படக்கூடாது என்பதை நாங்களும், பொதுமக்களும் விரும்புகின்றோம் என கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்துள்ளோம்.

எந்தவொரு உயிரையும் இழக்காது, இயல்பான சூழ்நிலை தோற்றுவிக்கப்படவேண்டும். இதனை, அரசும் 'இராணுவமும் ஏற்படுத்துமா என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது எனத் தெரிவித்தார்.

## கூத்துரு நாடகம் மேடையேற்றம்

சுதுமலை —

திருமறைக் கலாமன்றத்தின் சிறப்பு நிகழ்வான 'கொல் ஈனும் கொற்றம்' கூத்துருவ நாடகம் நாளையும் எதிர்வரும் 14 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளதாக மன்றத்தின் பிரதி இயக்குனர் ஜோ.ஜோண்சன் ராஜ்குமார் தெரிவித்தார்.

நாளை பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலை மண்டபத்திலும், 14 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கிலும் இடம்பெறவுள்ளது. (91)

## விவசாய உள்ளீடுகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம் —

உணவு விவசாய நிறுவனத்தால் கைதடி, தொல்புரம், புத்தூர், உடுவில், கீரிமலை, உரும்பிராய் ஆகிய கமநல நிலைய பிரதேசங்களில் பாதிப்படைந்த 40 விவசாயிகளுக்கு கத்தரி, தக்காளி, மிளகாய், வெண்டி, பாகல், புடோல், பயிற்றை ஆகிய விதைகள் அடங்கிய 3 ஆயிரம் ரூபா பெறுமதியான பொதிகள் வழங்கப்பட்டன.(72)

# றீடோ நிறுவனம் நடத்தும் முன்னோடி கருத்தரங்கு

யாழ்ப்பாணம் —

நோர்வோ அபிவிருத்தி நிதியத்தினதும் மற்றும் நோர்வே மாணவர்களினதும் நிதியுதவியுடன் றீடோ நிறுவனம் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவச முன்னோடிக் கருத்தரங்கொன்றை நடத்தவுள்ளது.

இன்று ஆரம்பமாகவுள்ள இந்தக் கருத்தரங்கில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான கருத்துரைகளே இடம்பெறவுள்ளன. இதனை றீடோ நிறுவனத்தின் வள நிலைய ஆசிரியர்களும், குறித்த பாடத்துறை சார்ந்த வேறு திறமையான ஆசிரியர்களும் நடத்தவுள்ளனர்.

இந்தக் கருத்தரங்கு இன்று தொடக்கம் எதிர்வரும் 8 ஆம் திகதிவரை சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியிலும், நாளைமுதல் 9 ஆம் திகதிவரை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. இந்தக் கருத்தரங்கில் சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை கலந்துகொண்டு பயன்பெறுமாறு றீடோ நிறுவன யாழ்.மாவட்ட இணைப்பாளர் தி.ஜெயக்குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தக் கருத்தரங்கின்போது இலவச கையேடுகள் விநியோகிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (91)

# காணாமற்போனோர், கைதுசெய்யப்பட்டோர் தொடர்பாக சர்வதேச நீதிமன்றில் வழக்கு?

## பாதுகாவலர் சங்கம் தீர்மானம்

சுதுமலை —

கடந்த காலங்களில் இலங்கை இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனோர் தொடர்பாக அவர்களது பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்டு காணாமல் போனோர் தொடர்பாக கடந்த அரசாங்கம் எந்தவித நடவடிக்கைகளையும் இதய சுத்தியுடன் மேற்கொள்ளாமையால், இந்த அரசாங்கத்தையும் நம்பாது சர்வதேச நீதிமன்றிடம் நீதி கேட்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மற்றும் அவரது ஆட்சிக் கால அதிகாரிகளுக்கு எதிராகவே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவுள்ளனர். இது தொடர்பான மேலதிக உதவிகளைப் பெற, சட்டத்தரணிகளை நாடியுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் தொடர்பாக இலங்கை அரசாங்கம் 10 வருடங்களாகியும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளாமையே தம்மை இவ்வாறான நிலைக்கு இட்டுச்சென்றதாகவும், மிக விரைவில் சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். (91)

# பரீட்சை ஆளணியினருக்கான அறிவுறுத்தல் கூட்டம் இன்று

மானிப்பாய் —

வலிகாமம், வடமராட்சி வலயக்கல்வி அலுவலகங்கள் மற்றும் கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலகங்களையும் கொண்ட யாழ்ப்பாண கல்வி வலயம் 11 இற்கு உட்பட்ட கல்விப் பொதுத் தராதரப் பத்திர பரீட்சை நிலையங்களில் கடமையாற்றவிருக்கும் ஆளணியினருக்கான அறிவுறுத்தல் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த அறிவுறுத்தல் கூட்டத்துக்கு மேற்படி பரீட்சைக்காக நியமிக்கப்பட்ட இணைப்பு அலுவலர்கள், உதவி இணைப்பு அலுவலர்கள், பரீட்சை மேற்பார்வையாளர்கள், உதவிப் பரீட்சை மேற்பார்வையாளர்கள் ஆகியோரைத் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (100)

# இரசாயனவியல் சமூகத்தின் சஞ்சிகை வெளியீட்டு விழா!

யாழ்ப்பாணம் —

யாழ்.பல்கலைக்கழக இரசாயனவியற் சமூகத்தின் 'Chemis Phere' எனும் ஆங்கில சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று நடைபெறவுள்ளது. இரசாயனவியல் சமூகத்தின் தலைவர் பா.பாபுலேஜன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில்-விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் பிரதம விருந்தினராகவும், யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் பேராசிரியர் இராஜேஸ்வரி மகேஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று மாலை 2 மணியளவில் நடைபெறவுள்ள இந்த நூல் வெளியீட்டு விழாவில் - வரவேற்புரையை சி.சிறிவிஜிந்திரனும், போசகர் உரையை கலாநிதி மீனா செந்தில்நந்தனனும், நூல் ஆய்வுரையை பேராசிரியர் எஸ்.பாலசுப்பிரமணியமும், ஏற்புரையை எஸ்.ராதிகாவும், நன்றியுரையை கே.ஹேமாவும் நிகழ்த்தவுள்ளனர்.

இந்த நூலின் முதற்பிரதியை இரசாயனவியற் சமூக சிரேஷ்ட பொருளாளர் கலாநிதி ஜே.பி.ஜெயதேவன் வெளியிட்டு வைக்க, விஞ்ஞான பீடாதிபதி பெற்றுக்கொள்ளவுள்ளார். நூல் வெளியீட்டைத் தொடர்ந்து நடைபெறும் கலை நிகழ்வுகளை இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களும், விஞ்ஞானபீட மாணவர்களும் வழங்கவுள்ளனர்.

இந்த நூலானது இரசாயனத்துறை சார்ந்த பல கட்டுரைகளையும், சமூக, தேச, சூழலியல் சார்ந்த பல பயனுள்ள கட்டுரைகளையும் தாங்கி வெளிவரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (94)

## கருத்தரங்கு

நெடுந்தீவு —

யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் அனுசரணையுடன் நெடுந்தீவு பிரதேச செயலகத்திற்குட்பட்ட வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கு கடந்த வியாழக்கிழமை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை மண்டபத்தில் இடம்பெற்றது. (113)

# பாப்பரசரின் பிரதிநிதி சின்னரோமுக்கு விஜயம்



யாழ்ப்பாணம் —

இலங்கைக்கான பாப்பரசரின் பிரதிநிதி பேராயர் கலாநிதி மரியோ செனாரி ஆண்டகை நேற்றுமுன்தினம் சின்னரோம் என அழைக்கப்படும் சில்லாலைக்கு யாழ்.ஆயருடன் விஜயம் மேற்கொண்டார்.



யாழ்ப்பாணம், கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் வெள்ளிவிழா நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக கடந்த 2 ஆம் திகதி யாழ்.நகர் வந்த இவர் - யாழ்.மாவட்ட தலைமை ஆலய புனித மரியன்னை பேராலயத்தில் பொதுமக்களுக்கான திருப்பலி ஒப்புக்கொடுத்து, பொதுநிலையினரை சந்தித்து அவர்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்தார்.

நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணிக்கு சில்லாலைக்கு விஜயம் மேற்கொண்டபோது அவருக்கு அங்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கு அவர் சிறப்பு ஆசீர்வாதம் வழங்கினார். இவரது வருகையின் ஞாபகார்த்தமாக ஆலய வளாகத்தில் மரம் ஒன்றையும் நாட்டிவைத்தார்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இன்று



பெயர் : பு.பிரியங்கா
முகவரி : கைதடி.

அகவை இன்று



பெயர் : ம.பவித்திரன்
முகவரி : வடலியடைப்பு

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:




பெற்றோர் ஒப்பம்




# புகைப்பிடிப்பதைக் கைவிட்டால் பலன் கிடைக்குமா?

புகைப் பழக்கத்தை விட்டொழிக்க நினைத்தாலும், சிலருக்குக் கை கூடுவதில்லை. இன்னும் சிலர், ரொம்ப வயசாயிடுச்சு. இனிமே சிகரெட்டைத் தூக்கிப் போட்டாலும் ஒரு பிரயோஜனமும் இருக்காது.



அதுக்கான காலம் எல்லாம் கடந்து போச்சு என்று நினைத்து, புகைப் பிடித்துக் கொண்டே இருக்கிறார்கள். இது போன்ற நினைப்பு இருந்தால் மாற்றிக் கொள்ளுங்கள். ஏனெனில் புற்றுநோய் உறுதி செய்யப்பட்ட பிறகுகூட புகைப் பழக்கத்தைக் கைவிடலாம். அப்போதும் நிச்சயம் நன்மை உண்டு என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

இதில் எவ்வளவுக்கு எவ்வளவு புகைப் பிடிக்கிறார்களோ, அதைப் பொறுத்து பாதிப்பு அளவும் கூடுதலாக அமையும்.

புகைப்பிடிக்கும் பழக்கத்தால் புற்றுநோய்கள் மட்டுந்தான் வரும் என்று நினைக்க வேண்டாம். ஏனெனில் இருதய நோய்கள், ரத்த அழுத்தம், பக்கவாதம் போன்ற இன்ன பிற ஆபத்துக்களுக்கும் இது தான் காரணி என்பதை மறக்கவேண்டாம்.

புகைப்பழக்கத்தை கைவிடுபவர்கள் அவர்களை மட்டும் காப்பாற்றிக்கொள்ளாமல், மற்றவர்களுக்கும் நல்ல முன்னுதாரணமாக இருக்க முடியும்.

# நுண்துளையிடும் கருவி

மனிதனின் மயிரைவிட நுண்ணியதாக துளையிடும் கருவியொன்றை காட்டிஃப் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் உருவாக்கியுள்ளனர். துருப்பிடிக்காத உலோகத்திலான இந்த துளையிடும் கருவியினால் மருத்துவ, இலத்திரனியல், பொறியியல் போன்ற துறைக்கு பெரும் வரப்பிரசாதம் கிட்டியுள்ளதாக இந்த ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



இந்தக் கருவியினால் துளையிடப்படும் துளை 22 மைக்ரோன் (0.022 mm) களாகும். ஆனால் மனிதனின் முடி 50 மைக்ரோ ன்களாகும்.

தற்போது உலகத்தில் மிக நுண்ணிய துளையிடும் கருவியாக இது விளங்குகிறது.

# மன அழுத்தத்தை குறைத்தால் கொலஸ்ட்ரோல் ஆபத்தும் தானாகவே குறையும்


மன அழுத்தம் இருதயம் சார்ந்த பலவிதமான நோய்களுக்கு காரணம் என்பது தெரிந்த விடயம். இந்த நிலையில் மன அழுத்தத்தை நீங்கள் எப்படி கையாளுகிறீர்கள் என்பதைப் பொறுத்து கொலஸ்ட்ரோல் ஆபத்தை குறைக்க முடியும் என்று லண்டன் விஞ்ஞா னிகள் கூறியுள் ளனர். மன அழுத்த பாதிப்பில்லாதவர்களுடன் ஒப்பிடும்போது மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதிப்பு அளவுக்கு ஏற்ப கொலஸ்ட்ரோல் அளவு கூடுதலாகவோ குறைவாகவோ இருப்பதாக இவர்கள் தெரிவித்துள்ளனர்.



இது தொடர்பாக நடுத்தர வயதுக்காரர்கள் 200 பேர் கலந்துகொண்ட ஆய்வு நடந்தது. முதலில் அனைவருக்கும் மன அழுத்த சோதனை நடைபெற்றது. பின்னர் கொலஸ்ட்ரோல் அளவைக் கணக்கிட்டு குறித்துக்கொண்டனர். 3 வருடம் கழித்து மனஅழுத்தம் மற்றும் கொலஸ்ட்ரோல் சோதனைகள் நடைபெற்றன. அப்போது மனஅழுத்த பாதிப்புக்குத் தகுந்தபடி கொலஸ்ட்ரோல் அளவில் மாற்றம் ஏற்பட்டிருப்பது தெரியவந்தது. கிட்டத்தட்ட 56 சதவீதம் பேருக்கு மன அழுத்தத்தைப் பொறுத்து கொலஸ்ட்ரோல் மாற்றம் ஏற்பட்டிருந்தது. இதில் ஆண், பெண் என்ற பாகுபாடு எதுவுமில்லை. இரண்டு பேருக்குமே ஒரேமாதிரியான பாதிப்புத்தான் காணப்பட்டது. (கொலஸ் ட்ரோல் அதிகமாக என்ன நடக்கும் என்பது நீங்கள் அறிந்த விடயம்தானே)


# உயரும் எயிட்ஸ் தாக்கம்

உலகம் முழுவதிலுமாக தற்போது 40.3 மில்லியன் மக்கள் எயிட்ஸ் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. தற்போது இதன் தாக்கம் கிழக்கு ஐரோப்பா, மத்திய மற்றும் கிழக்காசியாவிலும் தீவிரமாகிவருகிறது. தாய்லாந்து, கம்போடியா ஆகிய நாடுகளில் பாலியல் தொழிலாளர்களிடையேயும் அவர்களது வாடிக்கையாளர்களிடையேயும் இந்ததொற்று தீவிரமாகிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



மேற்கு நாடுகளில் ஒருபால் தொடர்பு மற்றும் போதைப் பொருள் பாவனை என்பவற்றால் எயிட்ஸ் பரவிவருகிறது. 2005 இல் இதுவரை 3 மில்லியன் பேர் எயிட்ஸ் நோயினால் இறந்துள்ளனர். இவர்களில் 500 ஆயிரம் பேர் சிறுவர்கள்.

# சூழல் வெப்ப மாநாடு



பூமி வெப்ப மடைதல் தடுப்புத் தொடர்பாக கனடாவில் நடைபெறும் ஐ.நாவின் உச்சி மாநாட்டில் எதிர்காலத்தில் எத் தகைய நடவடிக்கைகளை இது தொடர்பாக எடுக்கலாம் என விவாதம் நடத்திவருகின்றனர்.

பூமிவெப்பமடைதலைத் தடுப்பதான முன்னைய கியோட்டோ உடன்படிக்கை 2012 இல் காலாவதியாவதால் அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பெரும் சிக்கலாக உள்ளது.

கியோட்டோ உடன்படிக்கையில் முன்னர் சேர்ந்து கொள்ளாத ஏனைய நாடுகளை எதிர்காலத்தில் எப்படியாவது இணைத்துவிடவேண்டும் என்பதில் கனடா தீவிரமாக உள்ளது. அமெரிக்கா தொடர்ந்து இந்த உடன்படிக்கையை ஏற்க மறுத்து வருவது தெரிந்ததே.

# ஊனமுற்றோருக்கு விசேட பேரூந்து

ஊனமுற்றோர் பாவிக்கும் Wheel Chair களை ஏற்றக் கூடிய பயணிகள் பேருந்துகள் லண்டனில் பாவனைக்கு வரவுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக பிரிட்டிஷ் - போர்த்துக்கல் நிறுவனங்கள் இணைந்து உருவாக்கிய இந்த பஸ் வண்டிகள் ஊனமுற்றோருக்கு வரப்பிரசாதமாக அமையும்.





அவர்கள் Wheel Chair ஐ விட்டு எழுந்து சிரமப்படாது அவர்களை அப்படியே ஓர் உயர்த்தி (Lift) மூலம் உள்ளே தூக்கி ஏற்றும் வசதியுடை யதாக இந்த பஸ்கள் இருக்கும்.

National Express என்ற நிறுவனம் அடுத்த இரண்டாண்டுகளில் இத்தகைய 100 பஸ் வண்டிகளை சேவையில் ஈடுபடுத்த வுள்ளது. 2012 இல் லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கு முன்னதாக இத்தகைய பஸ்களை லண்டனில் தாராளமாக உலவவிடுவதே இந்த நிறுவனத்தின் நோக்கம்.

# பெரிய ஊசி

நோய் குணமாக ஊசி போட்டுக்கொள்கிறோம். ஊசி மூலம் செலுத்தப்படும் மருந்து இலக் கை அடைந்து குணப்படுத்தும்.



ஆனால், உடல் பருமனான ஆண்களுக்கும் பெண்களுக்கும் இந்த இடத்தில் நூதனமான பிரச்சினை ஏற்படுகிறது. அது என்ன?

ஊசிகள் பெரும்பாலும் பின்புறத்தில்தான் போடப்படுகின்றன. ஆனால், உடல் பருமனான பெண்களுக்கும் ஆண்களுக்கும் பின்புறத்தில் கொழுப்பு திரண்டு தடிமனாக இருக்கும். இதனால் மற்றவர்களுக்கு போடும் சாதாரண நீளமுடைய ஊசிகளை பயன்படுத்தக்கூடாது. ஏனெனில் தடிமனாக இருக்கும் பின்புறத்தில் இத்தகைய ஊசி மூலம் மருந்தை செலுத்தும்போது இலக்கை சென்றடையாமல் அங்கிருக்கும் கொழுப்பு திசுக்களிலேயே தேங்குகிறது. விளைவு தொற்றுநோய் அல்லது எரிச்சல் உண்டாகும்.

இந்தநிலையில் தடிமனான பின்புறம் கொண்டவர்களுக்கு சாதாரண ஊசியை பயன்படுத்தாமல் சற்று நீளமான ஊசியை போடவேண்டும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறியுள்ளனர். பருமனான நபர்களுக்கு தசை களின் மீது இருக்கும் கொழுப்பு திசுக்களின் எண்ணிக்கையானது ஊசியின் நீளத்தை விட அதிகமாக உள்ளது. இதனால் அதே ஊசியைப் பயன்படுத்தி மருந்தை செலுத்தும்போது ஒரு பிரயோசனமும் கிடைக்கா து என இவர்கள் தெரிவித்துள்ளனர்.

# செல்லிடத் தொலைபேசி கண்காட்சி

அடுத்தாண்டு ஹொங்கொங்கில் வருடாந்த செல்லிடத் தொலைபேசி கண்காட்சி நடைபெறவுள்ளது. ஆசியாவின் பிரமாண்டமான இந்தக் கண்காட்சி செல்லிடப் பேசிகளின் ஆதிக்கத்தை மீள் வலியுறுத்துவதாக அமையவுள்ளது. சில வருடங்களுக்கு முன் செல்லிடப் பேசிகளில் வீடியோ, படத்தகவல் அனுப்புதல், இன்டர்நெட் தொடர்பு போன்ற வசதிகளும் பொருத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டிருக்கவில்லை. ஐரோப்பா, அமெரிக்க கண்டங்களில்கூட செல்லிடப் பேசிகள் இன்று முதன்மைத் தொடர்பு கருவிகளாகியுள்ளன. இதன் வியாபகம் இதைக் கண்டுபிடித்து வெளியிட்ட ஜப்பான், கொரியா ஆகிய நாடுகளில் மிகப் பெரிதாகவுள்ளது.




# ஐ.நா.வின் ஏற்பாட்டில் தட்ப வெப்ப நிலை உச்சி மாநாடு

தட்ப வெப்பநிலை மாற்றம் குறித்த உச்சி மாநாட்டினை ஐ.நா.இதுவரை இல்லாத அளவு பிரமாண்டமாக கனடாவில் மொன்ட்ரீல் நகரில் நடத்துகிறது. நவம்பர் 28முதல் டிசம்பர் 9 வரை நடத்திவருகிறது. 8 ஆயிரம் முதல் 10 ஆயிரம் அரச பிரதிநிதிகளும், சுற்றுச்சூழல் நிவுணர்களும், அரசு சாரா அமைப்பினரும், இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். 1997ல் ஜப்பானில் உள்ள கியா ட்டோ நகரில் நடந்த புவி தட்பவெப்பநிலை மாற்றம் குறித்த மாநாட்டுக்குப் பிறகு நடக்கும் மாபெரும் மாநாடு இது. ஜெர்மனியில் உள்ள 'பான்' நகரில் செயல்படும் ஐ.நா.வின் தட்ப வெப்ப நிலை மாற்றம் குறித்த தலைமை செயலகத்தின் தலைவரான ரிச்சர்ட் கின்லே, இது பிரமாண் டமான மாநாடு மட்டுமல்ல; ஏராளமான முடிவுகளை எடுக்கவிருக்கும் மாநாடாகவும் அமையப் போகிறது, என் கிறார். கியோட்டோ ஒப்பந்தத்தின்படி உரு வாக்கப்பட்டுள்ள வளர்ச்சிக்கான தூய செய லமைவை தொடர்ந்து எப்படி அமுலாக்குவது என்பது குறித்தும் இந்த உச்சி மாநாடு ஆய்வு செய்யும். தவிர வெளியேற்றப்படும் கார் பனைச் சேகரிப்பது குறித்த தொழில் நுட்பம் குறித்தும் மாநாடு விரிவாக விவாதிக்கும்.




அதே சமயம் தற்போதைய தட்பவெப்ப நிலை மாற்றத்தை கட்டுப்படுத்தும் தொழில்நுட்பத்தைச் சந்தைப்படுத்துவது குறித்தும், புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குவது குறித்தும், வளர்முக நாடுகள், நீடித்த வளர்ச்சியில் ஈடுபடுவதற்கு ஏற்ற வகையில் தொழில்நுட்பம் சென்று சேர்வதை உறுதி செய்வது குறித்தும் இந்த மாநாடு விவாதிக்கும் என அறிவிக்கப்பட் டுள்ளது.

# வெள்ளிக்குச் செல்லும் செய்மதி




வெள்ளிக் கிரகத்துக்கு முதல் தடவையாக பூமியில் இருந்து அனுப்பப்பட்ட செய்மதி, இரண்டு வாரங்கள் கழித்து செல்லும் வழியில் பூமியை படம்பிடித்து அனுப்பியிருக்கிறது.



3.5 மில்லியன் கிலோ மீற்றருக்கு அப்பாலிருந்து அனுப்பப்பட்ட இந்தப் படத்தில் பூமி- சூரியனாலும் சந்திரனாலும் ஒளியூட்டப் பட்டுள்ளமை தெரிகிறது. அடுத்த ஆண்டு வெள்ளியைச் சென்றடையும் என எதிர்பார்க்கப்படும் இந்தச் செய்மதியின் பயணம் குறித்த பரிசேதனைகளை பூமியில் உள்ள அதன் கட்டுப்பாட்டாளர் கள் மேற்கொண்டு வருகின்றனர்.

வெள்ளி 467‘ளீ வெப்ப நிலையைக் கொண்டதாக இருப்பதால், வெள்ளியில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் வெப்பமடைந்து வரும் பூமியின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதைக் கண்டறிய உதவும் எனக் கூறப்படுகிறது.


# மலேரியாவிலிருந்து கொசுக்களைப் பாதுகாக்கும் ஜீன்



மனிதர்களிடம் மலேரியாவைப் பரப்பும் ஒட்டுண்ணிக்கு பிளாஸ்மோடியம் என்று பெயர். இந்த ஒட்டுண்ணியின் பாதிப்பு கொசுவைத் தாக்காம லிருக்கும் வகையில் கொசுக்களிடம் இயற்கையாகவே ஒரு ஜீன் காணப்படுகிறது. இந்த ஜீன்தான் மலேரியாவைப் பரப்பும் கொசுக்களுக்கு மலேரியா வராமல் பாதுகாக்கிறது என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் இந்த நோயை கொசுக்கள் பரப்புவதால், மலேரியா 55 கோடி பேரை தாக்குகிறது. இதில் 20 லட்சம் பேர் ஒவ்வொரு ஆண்டிலும் இறந்துவிடுகின்றனர்.

டெக்ஸாஸ் பல்கலைக்கழகம், ஜோன் கொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் மலேரிய இன்ஸ்டி டியூட் மற்றும் லண்டன் இம்பீரியல் கொலிஜ் ஆகியவற்றைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இந்த ஆய்வை நடத்தியுள்ளனர். மலேரியாவுக்கு காரணமாக பிளாஸ்மோடியம் மிகவும் சிக்கலான வாழ்க்கை முறையைக் கொண்டது. கொசுக்களின் எச்சில் குழாய்களில் அமர்ந்துகொள்ளும் இந்த பிளாஸ்மோடியம் கொசுக்கள் ரத்தம் உந்தபோது மனிதர்களில் புகுந்து விடுகிறது. எச்.பி.ஆர்.என்.எஸ் 6 என்ற ஜீன்தான் இந்த ஒட்டுயிர் கொசுக்களைத் தாக்காமல் காப்பாற்றுகிறது என்பதையும் விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர். மலேரியா பரவுவது குறித்து புரிந்துகொள்ள இந்த ஆய்வு பெரிதும் உதவியுள்ளது.

# அரிய நத்தைகள் இனப்பெருக்கம்



அரிய நத்தை வகைகளை பாதுகாத்து அவற்றை இனப்பெருக்கம் செய்ய வைப்பதில் லண்டன் மிருகக்காட்சிச்சாலை வெற்றியடைந்தள்ளது. பேர்முடாவைச் சேர்ந்த அழிந்து வரும் சில நத்தை வகைகள் கடந்த பெப்ரவரியில் லண்டன் கொண்டுவரப்பட்டன.

இன்னோர் வகை நத்தை ஒன்றினாலும் ஆர்டைன்டைன் எறும்பினாலும் தாக்கப்பட்டு அழிந்துவந்த இந்த நத்தையினத்தில் 300இக்கும் குறைந்தவையே தப்பிப்பிழைத்திருந்தன. லண்டன் மிருகக் காட்சிச் சாலையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட இனப்பெருக்கு முறையில் தற்போது 70 முதிர் நத்தைகளும் 157 இளம் நத்தைகளும் உள்ளன.

# தமிழ் மக்களை நம்பிக்கை இழக்கச் செய்துள்ள புதிய ஜனாதிபதியின் சுனாமி நிவாரணத் திட்டம்

கிளிநொச்சி—

புதிய ஜனாதிபதியின் சுனாமி நிவாரணப் பணித் திட்டம் தமிழீழ பிரதேசத் தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியிலிருந்த அற்பசொற்ப நம்பிக்கையையும் இழக்க வழிகோலியுள்ளதாக வன்னியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.


முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சுனாமி பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தி, அதன் மூலம் வட-கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப்பணி மேற்கொள்வதாகக் கூறி, காலத்தைக் கடத்தி, தானும் பதவி இழந்தார். இந்த விடயம் சிங்கள இனவாதிகளால் நீதிமன்றம் வரை சென்று முடக்கப்பட்டுவிட்டது.

சுனாமியால் வடமராட்சி, முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை உட்பட தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளிலும் பல ஆயிரக்கணக்கில் மக்கள் பாதிப்படைந்து நிர்க்கதியாகினர். இவ்வாறானவர்களுக்கு கடற்புலிகளும், தமிழர் புனர்வாழ்வுக்கழகமும், கிறிஸ்தவ மத அமைப்புகளும் அவசர உதவிகளை வழங்கின.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம், தமிழ் மக்களின் உள்நாட்டு, வெளிநாட்டு உதவியுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை அமைத்தும் ஏணைய விதத்திலும் உதவி வருகிறது.

இந்த நிலையில் புதிய ஜனாதிபதி மஹிந்தவின் சுனாமித் திட்டம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. சகல இடங்களிலும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதால், தமிழ் மக்கள் அதுவும் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் மேலும் பாதிப்படைவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு 'போரூட்' நிறுவனத்தால் உதவிகள்



கிளிநொச்சி—

கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வுக் கழகத்தின் ஒழுங்குபடுத்தலில் வெள்ளப் பெருக்கால் பாதிப்புற்ற மக்களுக்கு போரூட் நிறுவனத்தால் உணவல்லாத பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் வெள்ளத்தால் பாதிப்புற்ற வட்டக்கச்சி மாவடிக் கிராமத்தில் 250 குடும்பங்களுக்கு கூரை விரிப்பு, பாய், நுளம்புவலை, நிலவிரிப்பு, துவாய், சவர்க்காரம், பெற்சீற் போன்ற பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்தப் பொருட்களை போரூட் வெளிக்கள இணைப்பாளர் தி.சிவகரன் வழங்கி வைத்தார். அத்தோடு கனமழையின்போது பாதிப்புற்ற மக்களுக்கு இந்த நிறுவனம் சமைத்த உணலை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# செல்வாரி கிராமத்தில் 70 குடும்பங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பராமரிப்பு

மன்னார்—

தலைமன்னார் செல்வாரி கிராமத்தில் வசித்து வந்த 70 குடும்பங்கள் வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்துள்ளன.

இந்தக் குடும்பங்கள் 1990 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு இடப்பெயர்வுகளைச் சந்தித்த வண்ணமுள்ளன.

இந்தக் கிராமத்து மக்கள் கிராமிய அபிவிருத்தி நிதியத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகளில் தங்கியுள்ள வேளை, அண்மையில் பெய்த மழை வெள்ளம் காரணமாக மீண்டுமோர் இடப்பெயர்வை சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் குடும்பங்களில் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகள் 20 பேரும், கர்ப்பிணித் தாய்மார்களும், 20 வயோதிபர்களும் அடங்கலாக 260 பேர் வரை உள்ளனர்.

இவர்களின் உடனடித் தேவையைக் கருத்திற்கொண்டு மன்னார் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கடந்த சில நாட்களாக சமைத்த உணவை வழங்கி வருகின்றது. அத்துடன் குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்களுக்கான பால்மா வகைகளையும் வழங்கி, அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தும் வருகின்றது.

இந்த மக்களுள் குடும்பத்தில் 1 வயதுக்குட்பட்டோர் 17 பேர், 1 தொடக்கம் 5 வயதுக்குட்பட்டோர் 34 பேர், 5 - 12 வயதுக்குட்பட்டோர் 30 பேர், 18 - 60 வயதுக்குட்பட்டோர் 125 பேர், 60 வயதுக்கு மேற்பட்டோர் 17 பேரும் அடங்குவர்.

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### டிசம்பர் - 06

1774 : ஆஸ்திரியா முதன்முதலாக நாடுதழுவிய பொதுக்கல்வி முறையை அறிமுகப்படுத்தியது.

1799 : காபனீர் ஒக்சைட் வாயுவைக் கண்டுபிடித்த ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த இரசாயனவியலாளர் ஜோசப் பிளாக் காலமானார்.

1877 : "வாட்டர் கேட் ஊழலை" உலகறியச் செய்த, புகழ்பெற்ற அமெரிக்கப் பத்திரிகையான "வாஷிங்டன் போஸ்ட்"டின் முதல் இதழ் வெளிவந்தது.

☆ : அமெரிக்காவின் நியூஜெர்ஷியில், தோமஸ் அல்வா எடிசன் தானே பாடி பதிவுசெய்த "மேரி ஹாட் எலிட்டிஸ் லம்ப்" என்னும் பாடல் இசைத்தட்டை முதன் முதலாக கிராமபோனில் போட்டுக் காண்பித்தார்.

1906 : தென்னாபிரிக்காவில் டிரான்ஸ்வாலிற்கு சுயாட்சி உரிமையைப் பிரிட்டிஸ் அரசு அளித்தது.

1907 : மேற்கு வர்ஜீனியாவில் மானோங்கா என்னுமிடத்தில் உள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் பெரும் வெடி விபத்து ஏற்பட்டது. இதில் 360 இற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இறந்துபோயினர்.

1917 : பின்லாந்து குடியரசு நாடானதாக அறிவித்தது.

☆ : பெல்ஜியத்தின் மீட்புப் பணிக் கப்பலான "இமோ" நோவா ஸ் காட்டியாவில் ஹாலிஃபாக்ஸ் துறைமுகத்தில், வெடிமருந்துகளை ஏற்றி வந்த பிரான்சின் கப்பலான "மாண்ட் பிளாங்கில்" மோதியதனால் பெரும் வெடி விபத்து ஏற்பட்டது. இது காரணமாக ரிச்மாண்ட் என்னும் புறநகர்ப்பகுதி அடியோடு அழிந்தது. ஒரு அநாதை விடுதியிலிருந்த 200 குழந்தைகள் உட்பட 1600 பேர் உயிரிழந்தனர். 8000 பேர்கள் காயமடைந்தனர். 2000 பேர்களைக் காணவில்லை. புகையிரதப் பெட்டிகள் 2 கி.மீ தூரத்துக்கு அப்பால் தூக்கியெறியப்பட்டுக் கிடந்தன.

1918 : ஜப்பானிய ஆதிக்கத்தை முறியடிக்க உதவி புரியும்படி அமெரிக்காவை கொரியா கேட்டுக்கொண்டது.

1922 : ஐரிஸ் சுயாட்சி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

1926 : இத்தாலியில் முஸோலினி "திருமணமாகாதவர்கள் வரி" என்ற ஒரு வரியை திருமணம் முடிக்காதவர்கள் மீது விதித்தார்.

1926 : பிரான்ஸில் கறுப்புப் பனிமழை பெய்தது. இதற்குக் காரணம் என்னவென்று கண்டுபிடிக்க முடியவில்லை.

1929 : துருக்கி அரசு பெண்களுக்கு வாக்குரிமையளித்தது.

1958 : அமெரிக்கா பயோனீர் - 3 என்ற விண்கலத்தை சந்திரனில் ஆய்வுக்காக அனுப்பியது. இந்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

1960 : ரஷ்யா - சீனா கம்யூனிஷ சித்தாந்த வேறுபாடுகளைக் களையும் வகையில் "சமரசக் கொள்கை" அறிவிப்பு வெளியிடப்பட்டது. மாஸ்கோவில் மூன்று வார அகில உலக கம்யூனிச தலைவர்கள் மாநாடு முடிவடைந்த கையுடன் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

1966 : பிரிட்டிஸ் பிரதமர் ஹெறால்ட் வில்சன் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஐக்கிய நாடுகள் சபை றொடீஷியா மீது பொருளாதாரத் தடையைக் கொண்டுவந்தது.

1971 : பங்களாதேஷ் குடியரசுக்கு இந்தியா அங்கீகாரம் அளித்தது.

1990 : ஈராக் தான் ஆக்கிரமித்து வைத்திருக்கும் குவைத்திலும், தனது நாட்டிலும் பிடித்து வைத்துள்ள 2000 வெளிநாட்டவர்களை விடுவிப்பதாக சதாம் ஹுசையின் அறிவித்தார்.

1992 : இந்தியாவில் 450 வருடங்களுக்கு மேல் பழமையான அயோத்தியில் இருந்த பாபர் மசூதியை இந்து தத்துவவாதிகளான கர சேவகர்கள் இடித்துத் தரைமட்டமாக்கினர்.

1995 : வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள் அமைப்பில் மீண்டும் இணைந்து கொள்ள பிரான்ஸ் விருப்பம் தெரிவித்தது.

☆ : பின்லாந்து சுதந்திர தினம்.

தொகுப்பு :- சந்துரு

# திருமுறிகண்டி வியாபார நிலையங்களில் சுகாதாரக் குறைபாடுகள் திடீர் ஆராய்வு

கிளிநொச்சி—

தமிழீழ சுகாதார சேவைகளின் நடமாடும் சுகாதாரப் பிரிவினரும், தொற்று நோய்த் தடுப்புப் பிரிவினரும் இணைந்து திருமுறிகண்டிப் பகுதி உணவகங்கள், தேனீர்க்கடைகள், பல்பொருள் வாணிபங்கள், பழக்கடை என்பவற்றில் உணவுச் சுகாதார ஆய்வுகளை மேற்கொண்டனர்.

இதில் சுகாதாரக் குறைபாடுகள் நேரில் அறிவுறுத்தப்பட்டு, சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், நிலைய சுகாதார சுற்றாடல்கள் மலசல கூடங்கள் என்பன பற்றி ஆய்வு மேற்கொண்டு, மலசலகூட சுற்றாடல் சுகாதார மேம்பாட்டுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டது.

அத்துடன் நிலையங்களின் உரிமையாளர்கள், பணியாளர்களுக்கு "மழைக்காலத் தொற்று நோயிலிருந்து எம்மைப் பாதுகாப்போம்" எனும் தலைப்பிலான சுகாதார விழிப்புணர்வுக் கருத்தூட்டலும், அதனுடன் இணைந்து உணவு கையாளும் நிலையங்களின் சுகாதாரம் பேணல் தொடர்பிலும் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

வர்த்தகர்களுக்கான சுகாதாரக் குழு தெரிவுசெய்யப்பட்டு, சுகாதாரத்துக்கான செயற்பாடுகள் முன்னெடுக்க ஒழுங்கு செய்யப்பட்டது. அதிகளவிலான சுகாதாரக் குறைபாடுகள் காணப்பட்ட நிலையங்களுக்கு அடையாளக் குற்றப்பணங்கள் அறவிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## குடிநீர் வழங்க ஏற்பாடு

கிளிநொச்சி—

தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையினரால் கிளிநொச்சி - பரந்தன் பிரதேசங்களுக்குக் குடிநீர் வழங்குவதற்கான துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சியிலிருந்து, பரந்தன் வரையான பகுதிகளுக்கு நீர் வழங்குவதற்கான குழாய்கள் முன்னோடி நடவடிக்கையாக நேற்றுமுன்தினம் அனுப்பிவைக்கப்பட்டு, வேலைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கிணறுகளுக்கு குளோரின் இடல்

மன்னார்—

மன்னார் மாவட்டத்தில் இதுவரை காலமும் இல்லாதவாறு மழை பெய்தமையால், மன்னார் நகரத்திலுள்ள தாழ்ந்த பிரதேசங்களான - பள்ளிமுனை, உப்புக்குளம், தலைமன்னார், எழில்நகர், சாவற்கட்டு, எழுத்தூர் போன்ற கிராமங்களிலுள்ள பொதுக்கிணறுகள் மற்றும் தனியார் கிணறுகளிலுள்ள நீர் பாவனைககுதவாத நிலையில், சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படுகின்றது. இந்தச் சுகாதாரச் சீர்கேட்டைத் தவிர்ப்பதற்காக, மன்னார் பிரதிமாகாண சுகாதாரப் பணிப்பாளர், அனர்த்த முகாமைத்துவ சுகாதார சேவைக் குழுக்களை மன்னார் மாவட்டம் முழுவதற்கும் நியமனம் செய்துள்ளார்.

இந்தக் குழுக்கள் அனைத்துக் கிராமங்களுக்கும் சென்று, சுகாதாரம் தொடர்பான கருத்துரைகளை வழங்கி வருகின்றதுடன், கிணறுகளுக்கு குளோரினையும் இட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



தமிழீழ காவற்துறை நடுவப்பணியகத்திற்கு வருகைதந்த சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் திருமதி ஜரின்கானையும், அவரது குழுவினரையும் - தமிழீழ காவற்துறைப் பொறுப்பாளர் ப்ா.நடேசன் சந்தித்துக் கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

ஒரு மனிதனின் சுதந்திரத்தையும், செயல் துடிப பையும் பறித்துவிட்டு அவனிடம் பண்பையும், துணிவையும் உருவாக்க முடியாது.

- வில்லியம் போட்கெர் -

## நமது நோக்கு

# தெரிவிப்பது தமிழ் பேசும் மக்கள்; தீர்மானிப்பது சர்வதேச சமூகம்

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடந்த சில நாட்களாக இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் சீர்செய்ய முடியாத அபாயகரமான கட்டத்திற்குக் கொண்டு செல்லும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரான ஹக்ரப் ஹொக்லண்ட் அவர்கள் தெரிவித்துள்ளமையானது, நிலைமைகள் விபரீதமான சூழலை நோக்கி வேகம் கொண்டுள்ளதை அவர் நன்கு புரிந்துகொண்டுள்ளமையை உணர்த்துவதாக உள்ளது.

கடந்த நான்காண்டு கால சமாதான முயற்சிகளின் பெறுபேறுகள் எதனைச் சாதித்துள்ளது என்ற கேள்விக்கு அவரின் இந்தக் கருத்தைக் கொண்டுள்ள அறிக்கையிலுள்ள வாசகங்களே சிறந்த பதிலாகவும் உள்ளது எனலாம்.

போர் நிறுத்த மற்றும் புரிந்துணர்வு கால அமைதியென்பது - இதுநாள் வரையும் சமாதான சூழலை இறுக்கமாகவும், நம்பிக்கையேற்படுத்தும் வகையிலும், எதையும் சாதிக்கவில்லையென்பதும், இலங்கையின் இனப்பிரச்சினையை அது எந்த வகையிலும் தணிக்க உதவவில்லையென்பதும் அண்மைக்கால தொடர் நிகழ்வுகள் மூலம் வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

இந்த நான்காண்டு காலம், சமாதானமற்ற சமாதான நிலையையும், யுத்தமற்ற - யுத்த நிலையையும் பேணிப் பாதுகாத்ததேயன்றி, அச்சமற்ற நிரந்தர சமாதானத்திற்கான -எந்தவொரு தீர்க்கமான அடித்தளத்தையும் ஏற்படுத்த வலலை என்ற யதார்த்தம் ஏற்றுக்கொள்ளக் கசப்பானதொன்றாக இருந்தாலும், அதுவே உண்மையென்பதை சர்வதேச சமூகமும், நோர்வே அரசும் இப்போது உணர்ந்துகொள்ள வேண்டிய ஒரு நெருக்கடியான கட்டம் ஏற்பட்டுள்ளது.

சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள தற்போதைய ஆட்சி மாற்றம், பல விடயங்கள் குறித்து இதுவரை ஏற்பட்டிராத தெளிவையும், விளக்கத்தையும் சமாதான அனுசரணையாளருக்கும், சிறிலங்கா அரசின் சமாதான நகர்வு மீதான விசுவாசத் தன்மையில் நம்பிக்கை கொண்டிருக்கும் சர்வதேச சமூகத்திற்கும் ஏற்படுத்திவரும் சூழலில், இன்றைய வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உருவாகியுள்ள நிலைமையின் விபரீதத் தன்மையானது, புதிய பல செய்திகளைச் சொல்லவே போகிறது எனலாம்.

கிழக்கில் மையம் கொண்டு சமாதான அமைதிச் சூழலைத் தகர்க்கத் தொடங்கிய அரச படைகளினது நிழல் யுத்தமானது, இப்போது வடக்கு நோக்கித் தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கியதையடுத்து ஏற்பட்ட எதிர் விளைவுகளை அரசால் ஜீரணிக்க முடியவில்லை என்பது தான் உண்மையாகும்.

அதுவும், குறிப்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் போராளிகள் குடாநாட்டின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளை விட்டு வெளியேறிய பின்னர் நிகழும் சம்பவங்கள், மக்கள் மத்தியில் அச்ச உணர்வையும், பீதியையும் ஏற்படுத்த வைத்துள்ளதுடன், மற்றொரு இடப்பெயர்வுக்கு தம்மை தயாராக்கிக் கொள்ள எத்தனிக்கும் நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினராலும், அரச படைகளுடன் சேர்ந்தியங்கும் தமிழ் ஆயுதக் குழுக்களாலும் மேற்கொள்ளப்படும் தமிழ் உணர்வாளர்களை, தமிழ்த் தேசியவாதிகளை இலக்கு வைத்ததான இந்த நிழல் யுத்தத்தின் பதில் விளைவுகள் உடனுக்குடன் படைத்தரப்பினரைப் பாதிக்கும் சூழலானது நிலைமை மோசமடைந்து விட்டுள்ளதை உறுதி செய்வதாகவே உள்ளது.

உண்மையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் புரிந்துணர்வு உடன்பாட்டின் முக்கிய சரத்துக்களை உடனுக்குடன் ஒப்புக்கொண்ட பிரகாரம் நடைமுறைப்படுத்த அரசை நிர்ப்பந்தித்திருப்பார்களேயானால் நிலைமை இந்த அளவுக்கு விபரீதமாகிப் போயிருக்காது.

சிறிலங்கா அரசாங்கமும் இதய சுத்தியுடன், ஜனநாயகப் பண்புடன் போர் நிறுத்த உடன்பாட்டை தேசிய நலன் கருதிய நோக்கில் நடைமுறைப்படுத்துவதில் தீவிரம் காட்டியிருந்தாலும் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. இப்போது எல்லாமே கட்டுமீறிப் போய்க்கொண்டிருக்கும் வேளையில், நிலைமையைச் சமாளிக்க முடியாது திணறி, அறிக்கை விட்டு, எச்சரிப்பதானது கவலைக்குரிய நிலையேயாகும்.

இன்றும் கூட வாய்ப்பு இருக்கவே செய்கிறது. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் - நோர்வே அரசும் - சர்வதேச சமூகமும் ஏற்கனவே அவர்களின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்பாட்டை எவ்வித காலதாமதமுமின்றி முழுமையாக, இறுக்கமாக அமுல்படுத்த அரசுக்கு அழுத்தம் கொடுத்து நடைமுறைப் படுத்துவார்களேயானால் விபரீதமாகிவரும் சூழலைத் தணிக்க முடியும்.

ஆனால், அதனைச் செய்ய அவர்கள் துணிவார்களா என்பதே கேள்வியாகும்.


அப்படித் துணிந்தாலும் அவர்களின் அழுத்தத்திற்கு அரசு சம்மதிக்குமா என்பதே அடுத்த கேள்வியாகும்.

இந்தக் கேள்விகள் பாதிக்கப்பட்டு - பீதிக்குள் வாழும் தமிழ் மக்களிடமிருந்து எழுகின்றமையால் அதன் நியாயத் தன்மையை புரிந்து கொண்டு செயற்படவேண்டிய பொறுப்பு நோர்வே அனுசரணையாளர்களுக்கும், சர்வதேச சமூகத்திற்குமே உண்டு.

சிங்கள அரசின் வாக்குறுதிகளை ஏற்று - நம்பி - ஏமாறும் நிலையில் தமிழ் மக்கள் இப்போது இல்லை என்பதை இச்சமயத்தில் கூறவேண்டிய அவசியம் இருக்கவே செய்கிறது.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




## தெற்குத் திசையிலிருந்து... - இந்திரஜித்



# சிக்கலுக்குள் அரசாங்கம்; நெருக்கடிக்குள் சமாதானம்!



ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் எடுத்த தீர்மானத்தால் இன்று தென்னிலங்கை பாரிய சவாலை எதிர்நோக்கியுள்ளது. தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பைப் புறக்கணித்ததானது தென்னிலங்கையின் சிங்களவர்கள் தமது வெற்றிகுறித்துப் பெருமைப்பட முடியாத நிலையை ஏற்படுத்திவிட்டது. சிங்கள மக்களின் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றுள்ள நிலையில், அவரின் வெற்றிக்குப் பின்னால் ஜே.வி.பி. இருந்தது உண்மை. என்றபோதும தமிழர்கள் இந்தத் தேர்தலைப் பகிஷ்கரித்தமையால் அவரின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டது என்பது ஜே.வி.பியும் ஏற்றுக் கொள்ள வேண்டிய யதார்த்தமாகும்.

புதிய ஜனாதிபதி சமாதான முயற்சிகளில் தமது பிரயத்தனத்தைக் காட்டவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளார். அதற்கான அடித்தளமும் உறுதியாகப் போடப்பட்டுள்ளது. இதுவரை காலமும் ஒற்றையாட்சியின் கீழ் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என வலியுறுத்தி வந்த மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டமைப்பு, இன்று ஐக்கிய இலங்கை என்ற வரையறைக்குள் இனப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டிய கட்டாயத்திற்குள் தளளப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு தென்னிலங்கையிலும், மலையகத்திலும், கிழக்கிலும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, மேல்மாகாண மக்கள் முன்னணி என்பன ஐக்கிய இலங்கைக்குள் சமாதானத் தீர்வு காணப்படவேண்டும் என்ற அடிப்படையிலேயே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவை வழங்கின. அதன் அடிப்படையில் ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க 48 லட்சம் பேரின் அங்கீகாரத்தைப் பெற்றார்.

மஹிந்த ராஜபக்ஷ ஒற்றையாட்சியின் கீழ் இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என வலியுறுத்தி வந்தாலும், அவருக்கு ஆதரவளித்து வந்த ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றைத் தவிர ஏனைய கட்சிகள் ஐக்கிய இலங்கைக்குள்ளேயே பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும் என்ற கொள்கையை கொண்டிருந்தன. இதனடிப்படையில் ஐக்கிய இலங்கைக்குள் பரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்ற கொள்கைக்கே பெருமளவான மக்கள் வாக்களித்துள்ளார்கள். இது யதார்த்தமான விடயம் என்றாலும்கூட இதனை ஒற்றையாட்சியை வலியுறுத்தி வரும் ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் எப்படி ஏற்றுக் கொள்ளப் போகின்றன. அந்த கட்சிகளை ஐக்கிய இலங்கைக் கொள்கையை ஏற்றுக்கொள்ள வைக்கும் மாற்று ஏற்பாடாகவே இந்தியாவின் தலையீட்டை அல்லது அங்கீகாரத்தை இந்த ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டிற்குப் பெற்றுக் கொள்வது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டமிட்டார். அந்தத் திட்டம் இன்று பலனளித்துள்ளது. இந்தியா ஐக்கிய இலங்கைக்குள் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளது. எனவே இஙகு ஜே.வி.பியும், ஜாதிக ஹெலஉறுமயவும் ஒற்றையாட்சி கொள்கைளைத் தூக்கி பிடிக்க வாய்ப்புகள் அரிதாகவே உள்ளன. இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால் ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை, தாயகக்கோட்பாடு, போன்ற அம்சங்கள் சிங்கள தலைமைகளால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். அது ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால், தீர்வுக்கான வாய்ப்புகள நடைமுறையில் இல்லை என்ற விடயம் ஜே.வ.பிக்கும், ஜாதிக ஹெல உறுமயவுக்கும், நன்றாகவே தெரியும். எனினும் தாம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சிங்கள சமூகத்தை திருப்திப்படுத்த வேண்டிய அவசியம் அந்த கட்சிகளுக்கு இருக்கிறது. எனவே இந்த விடயத்தை இந்திய வலியுறுத்தலாக சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு செல்ல இந்த இரண்டு கட்சிகளும் விரும்புகின்றன. ஏனெனில் 1987 ஆம் ஆண்டின் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் சிங்கள மக்கள் இந்தியாவின் மீது வெறுப்பைக் கொண்டிருந்தாலும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் போர் ஆரம்பித்த பின்னர் இந்த வெறுப்பை தளர்த்திக்கொண்டனர். சிங்கள மக்கள் இந்தியர்களை அடிப்படையில் தமிழர்களாக எண்ணுகிறார்கள். எனவேதான் இந்திய இலங்கை ஒப்பந்தம் தமிழர்களுக்குச் சார்பாக அமைந்துவிட்டது என அவர்கள் கருதினர். தற்போதைய சூழ்நிலையில் சிங்களவர்கள் இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியாவின் தலையீடு இருந்தால் தான் தமிழீழ விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்த முடியும் எனக் கருதுகிறார்கள். இதனைப் புரிந்து கொண்ட நிலையிலேயே ஜே.வி.பியும், ஜாதிக ஹெலஉறுமயவும் இந்தியாவின் ஆதரவை இந்த விடயத்தில் எதிர்பார்க்கின்றன. ஆயினும், இந்தியா இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் நேரடியாகத் தலையிடாது என்பதும், இந்தக் கட்சிகளுக்குத் தெரியாமல் இல்லை. மறுபுறத்தில் தற்சமயம் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஏற்பாட்டாளராகச் செயற்படும் நோர்வேயை அதிலிருந்து வெளியேற்றும் பிரசாரத்தை ஜே.வி.பியும், ஜாதிக ஹெலஉறுமயவும் மேற்கொண்டு வந்தபோதிலும், மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் இந்தக் கொள்கையிலும் மாற்றங்கள் ஏற்படுவது அவசியமாகிவிட்டது. அனுசரணைப் பணியிலிருந்து நோர்வேயை அகற்றினால் தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தைக்கு வரமாட்டார்கள் என்பதும் அந்தக் கட்சிகளுக்குத் தெரியும்.

இந்த நிலையில் இதனை எவ்வாறு சிங்கள மக்களிடம் சொல்லுவது என்ற சவால் புதிய அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது. எனவே இதனையும் இந்தியாவைக் கொண்டே செயற்படுத்த மஹிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார் இதன் ஒரு கட்டமாகவே இலங்கையின் இனப்பிரச்சினை உள்நாட்டு பிரச்சினை என்றும், அதனை தீர்ப்பதற்காக ஏற்பாட்டாளராக செயற்படும் நோர்வேக்கு தமது ஆசீர்வாதம் இருக்கும் என்றும் இந்தியாவைக் கூற வைப்பதன் மூலம் நோர்வேயைத் தொடர்ந்தும் ஏற்பாட்டாளராக ஏற்றுக் கொள்ளும் நிலையை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் முயற்சியில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி கண்டு வருகிறார் என்றே சொல்ல வேண்டும். இதனடிப்படையில் தற்சமயம் தென்னிலங்கை சிங்களக் கட்சிகளின் மத்தியில் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஆரம்ப இணக்கத்தை ஏற்படுத்துவதில் மஹிந்த ராஜபக்ஷ, அரைவாசி வெற்றியை அடைந்துள்ளார். எனினும், நாடாளுமன்றத்தில் தமது பெரும்பான்மையை ஏற்படுத்துவதற்காக தமது அரசாங்கத்துள் உள்வாங்கி, அல்லது நாடாளுமன்றத்தில் தமது அரசாங்கத்திற்கு ஆதரவாக செயற்படும் நோக்கல் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் சறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றுடன் பேச்சுக்களை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. இது அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் தலைமையில் நடந்து கொண்டிருக்கிறது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் அமைச்சரவையில் இடம் கிடைக்காவிட்டாலும், இனப்பிரச்சினைத் தர்வு விடயத்தில் அரசாங்கத்திற்கு அந்த கட்சிகள் ஆதரவை வழங்கியே ஆகவேண்டும் என்றநிலை ஏற்பட்டுள்ளது. இதில் முக்கியமாக ஐக்கிய தேசிய கட்சியின் பங்கு அதிகமாக இருப்பதை யாரும் மறுக்கமுடியாது. ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது தாம் வெற்றிபெற்றவுடன் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் முதலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் பேச்சு நடத்தி இணக்கத்தைக் கொண்டு வரப்போவதாக அந்தக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துவந்தார். எனவே, அவருக்கு புதிய அரசாங்கம் தென்னிலங்கை கட்சிகளுடன் இணக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கும்போது அல்லது நாடாளுமன்றத்தில் இந்த பிரச்சினைக்கான தீரவில் பெரும்பான்மையை கோரும் போது எதிர்ப்பை வெளிக்காட்ட முடியாது.

இது உண்மையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு சவாலான விடயமே. இனப்பிரச்சினை தீரவின் அம்சங்கள் இவ்வாறு சென்று கொண்டிருக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியை மாத்திரமே எதிர்பார்த்திருந்த ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்தமையால் துவண்டு போயுள்ளது. கட்சியின் தோல்விக்கு ரணில் விக்கிரமசிங்கவே காரணம் என்ற அடிப்படையில் அவரை பதவி விலகக்கோரி நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவின் தலைமையிலான குழுவும், அவரே தொடர்ந்தும் பதவியில் இருக்கவேண்டும் என கட்சித் தலைவர் மலிக் சமர விக்கிரம தலைமையிலான குழுவும் இன்று இருகூறுகளாக பிரிந்து நிற்கின்றன. இதனை மறைக்கும் முகமாகவே தமது தோல்வியை தமிழீழ விடுதலைப் புலிகளின் சதி என்று காட்டி அந்த அமைப்புக்கு எதிரான கருத்துக்களை ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டு வருகிறது. குறிப்பாக மாவீரர் தின உரையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், ரணில் விக்கிரமசிங்க தமது ஆயுதங்களைக் களையும் நடவடிக்கைக்கு முன்னுரிமை கொடுத்தார் என தெரிவித்தமையை, சிங்கள மக்கள் மத்தியில் நியாயப்படுத்தும் பிரசாரங்களை ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்டு வருகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளே ஐக்கிய தேசிய கட்சியின் காலத்தில் தாம் இறுக்கமான சூழ்நிலையில் இருந்ததை ஏற்றுக்கொள்ளும்போது, எவ்வாறு தென்னிலங்கையில் தாம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நாட்டை பிரித்துக் கொடுக்கப் போகிறோம் என்ற கேள்வியை அந்தக் கட்சி எழுப்பிவருகிறது. இது ஜனாதிபதித் தேர்தலில் அந்தக் கட்சியை நம்பி ஆதரவளித்த தமிழ் கட்சிகளுக்கும் சங்கடத்தை ஏற்படுத்தவே செய்துள்ளது.

# யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியற் கழகத்தின் 'CHEMISPHERE' நூல் வெளியீட்டு விழா சிறப்பு மலர்.

## அறிவுக்கு வளம் சேர்க்கும் நூல்



யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் இரசாயன்வியல் கழக வெளியீடான (CHEMISPHERE) எனும் சஞ்சிகை மூன்றாவது தடவையாக வெளியீடு செய்யப்படு வதை அறிந்து நான் மிக மகிழ்ச்சி யடைகின்றேன்.

இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ள பத்திராதிபர் உள்ளிட்ட தற்போதைய நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களை நான் பாராட்டுகின்றேன். மாணவர் சமூகத்தால் சஞ்சிகை ஒன்று வெளியிடப் படுவது இளம் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்து வதோடு பல்கலைக்கழகம், பாடசாலைகள் மற்றும் சமூகத்துக்கும் பயன் மிக்கதாகின்றது.

இரசாயனவியல் அறிவுக்கு வளம் சேர்க்கும் பல கட்டுரைகளையும் , பிற ஆக்கங்களையும் இது வெளிக்கொணரும் என நம்புகிறேன். CHEMISPHERE ஆனது வருடம் தோறும் வெளியிடப்படும் என நம்பும் அதேவேளை தற்போதைய நிறைவேற்றுக் குழுவை வாழ்த்துவதில் மகிழ்வும் அடைகின்றேன்.

பேராசிரியர் சு.மோகனதாஸ்
துணைவேந்தர்

## விடாமுயற்சியின் வெற்றிக் கனி!



யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விஞ்ஞானபீட இரசாயனவியல் கழகத்தின் CHEMISPHERE எனும்சஞ்சிகையின் மூன்றாவது இதழை வெளியிடும் இத்தருணத்தில் இந்த வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தச் சஞ்சிகையின் முதலிரு இதழ்களும் 1990, 1991 ஆகிய ஆண்டுகளிலே வெளியிடப் பட்டன. பதினான்கு வருடங்கள் கடந்த நிலையில் இரசாயனவியல் கழகத்தின் தற்போதைய அங்கத்தவர்கள் மூன்றாவது இதழை இவ் ஆண்டிலே வெளியிடுவது மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது.


CHEMISPHERE ஆனது தரம்மிக்க பலகட்டுரைகளைக் கொண்டு மாணவ சமுதாயமிடையே அறிவினை விருத்தி செய்ய உதவும் என நான் உறுதியாக நம்புகிறேன். மேலும் இந்தச் சஞ்சிகையானது பல்கலைக் கழக மாணவர்கள் தமது எண்ணங்களையும் கருத்துக்களையும் ஆங்கிலத்தில் வெளியிடுகின்ற திறன்களை விருத்தி செய்யவும் உதவுகிறது.

கடந்த காலங்களில் CHEMISPHERE ஆனது தனது ஆக்கங்களின் தரத்தை பேணியது போன்றே இந்த மூன்றாவது இதழும் அமையும் எனத் திட்ட வட்டமாக நான் நம்புகின்றேன். நிதி நெருக்கடிகளுக்கு மத்தியில் மீளவும் இந்தச் சஞ்சிகை வெளியீடானது இந்த ஆண்டின் இரசாயனவியல் கழக அங்கத்தவர்களின் விடாமுயற்சியையும் ஊக்கத்தினையும் காட்டுகிறது.

CHEMISPHERE சஞ்சிகையானது எதிர் காலத்திலும் தங்குதடையின்றி ஒவ்வொரு ஆண்டும் மலர எனது நல் ஆசிகள்.

பேராசிரியர் திருமதி.இராஜேஸ்வரி மகேஸ்வரன்
சிரேஸ்ட பேராசிரியர் – (அசேதன இரசாயனம்)
முதல்வர் வவுனியாவளாகம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## தரமான இரசாயன நூல்



யாழ்.பல்கலைக்கழகத்தில் இரசாயனவியலை ஒரு பாடமாக கற்கும் மாணவர்கள் அங்கம் வகிக்கும் இரசாயனவியல் கழகம் 14 வருட இடைவெளிக்குப் பின்னர் வெளியிடும் CHEMISPHERE எனும் சஞ்சிக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் இரசாயன வியல் சமூகத்தின் சிரேஸ்ட பொருளாளர் என்ற வகையில் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த சஞ்சிகையானது இரசாயனவியல் சம்பந்தமான ஆக்கங்களை மட்டுமல்லாது சூழலியல், யாழ்ப்பாணக் குடாநாடு சம்பந்தப்பட்ட முக்கியமான தகவல்களையும் தாங்கி வருவது சிறப்பம்சமாகும்.

ஆங்கிலத்தில் தரமான விஞ்ஞானக் கட்டுரைகளை வாசிக்கும் ஆவலுள்ளோரின் ஆவலை CHEMISPHERE நிச்சயம் பூர்த்தி செய்யும்.

மிகுந்த சிரமத்தின் மத்தியில் இச்சஞ்சிகையை வெளியிட்ட தற்போதைய இரசாயனவியல் கழக நிர்வாக சபை உறுப்பினர்களையும் வேறு வழிகளில் உதவிகள் செய்தோரையும் பாராட்டுவதுடன் தொடர்ந்துவரும் வருடங்களிலும் இச் சஞ்சிகையை ஆண்டுதோறும் வெளியிடுவார்கள் என்ற நம்பிக்கையில் இவ்வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கலாநிதி ஜே.பி.ஜெயதேவன்
சிரேஸ்ட பொருளாளர்
இரசாயனவியல் கழகம்.

## இரசாயனவியல் கழக நிர்வாகக் குழு 2005–2006



நிற்பவர்கள்: இடமிருந்து வலமாக - அ.தர்சினி(உபசெயலாளர்), சி.ரஞ்சனா(உப தலைவர்) இ.சர்வேஸ்வரா(2ஆம் வருட பிரதிநிதி), யோ.குகதாஸ் (1ஆம் வருட பிரதிநிதி), இ.குமுதினி (பத்திராதிபர்), க.நிலானி (3ஆம் வருட பிரதிநிதி)
அமர்ந்துள்ளவர்கள்: இடமிருந்து வலமாக - சி.சிறிவிஜிந்திரன் (பொருளாளர்), கே.கேமா(செயலாளர்), கலாநிதி மீனா செந்தில்நந்தனன் (இரசாயனவியல் துறைத் தலைவர், காப்பாளர்), பா.வாகுலேஜன் (தலைவர்), கலாநிதி.ஜே.பி.ஜெயதேவன் (சிரேஸ்ட பொருளாளர்), எஸ்.ராதிகா (பத்திராதிபர்)

**நிகழ்ச்சி நிரல்**

| | |
|---|---|
| பிரதம விருந்தினர் | : பேராசிரியர் இ.குமாரவடிவேல் பீடாதிபதி விஞ்ஞானபீடம் |
| சிறப்பு விருந்தினர் | : பேராசிரியர் இராஜேஸ்வரி மகேஸ்வரன் முதல்வர் வவுனியா வளாகம் |
| நேரம் | : 2.30 பி.ப |
| இடம் | : கைலாசபதி கலையரங்கம். |

மங்கல விளக்கேற்றல்
வரவேற்புரை
தலைமையுரை
காப்பாளர் உரை
சிறப்பு விருந்தினர் உரை
சிரேஸ்ட பொருளாளர் உரை
மலர் வெளியீடு
பிரதம விருந்தினர் உரை
ஆய்வுரை
ஏற்புரை
கலைநிகழ்வுகள்
நன்றியுரை

## பலநாள் பொழுதுகளின் படைப்புகள்...





கால நீரோட்டம் வெகுவாக எம்மைக் கடந்து சென்கின்றது. போட்டியும், திறனும் மிகுந்த உலகிலே பெறுமதியான விடயங்கள் ஒரு சிலவற்றையாவது எம்மால் சாதிக்க முடியாது போகும் வேளையில் எமது இருப்பு வீணானதாகப் போய்விடுகிறது. இந்த யதார்த்த நிலை யுணர்ந்த அவாவின் வெளிப்பாடே இன்று வெளிவரும் CHEMISPHERE எனும் சஞ்சிகையின் மூன்றாவது பிரசவமாகும்.

பலநாள் பொழுதுகளின் படைப்பாய் வெளிவரும் இந்நூல் எமது தேச தேவையை நிறைவு செய்வதுடன், அனைத்து தரப்பினருக்கும் உகந்ததாக அமையும் என நம்புகின்றோம்.

பதினான்கு வருடங்களுக்குப் பின் சுமைகள், இன்னல்களைத் தாங்கி மண்ணைத் துளைத்து முளைவிடும் வித்தின் உத்வேகம் போல் இன்று இந்த சஞ்சிகை வெளிவருகின்றது. இதன் பிறப்பிலே தமது பெறுமதியான பொழுதுகளை எம்மோடு இணைந்து அர்ப்பணித்தவர்கள் ஏராளம். அத்தனை கரங்களையும் அன்புடன் இறுகப்பற்றிக் கொள்கின்றோம்.

செல்வி. குமுதினி இராஜேந்திரம்
செல்வி. ராதிகா சிவராஜா,
இதழாசிரியர்கள்.

## தேச நலன்காக்கும் நூல்



எமது இரசாயனவியல் கழகமானது எமது பீட மாணவர்களுடைய திறன்களை வெளிக்கொணரும் வகையில் பல்வேறு முயற்சிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது. அத்தகைய தொடர் செயற்பாட்டினுடைய ஒரு வடிவமே CHEMISPHERE சஞ்சிகை வெளியீடாகும்.

இந்த நூலானது பல பயன்தரும் அம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ளதுடன், எமது தேச, சூழல் தொடர்பான பல ஆய்வு விடயங்களையும் சுமந்து வருகின்றது. எனவே இந்த நூலானது என்றும் எமது சமூகத்துக்கு பயன் மிக்கதாக அமையும் என நம்புகின்றேன்.

அத்துடன் இந்த நூலை சிறப்புற அமைப்பதற்கு வேண்டிய உதவிகளை எந்நேரமும் வழங்கிய எமது துணைவேந்தர் பீடாதிபதி, துறைத்தலைவர், விரிவுரையாளர்கள் ஆகியோருக்கும், இந்த நூலுக்கான விளம்பரங்களைத் தந்துதவிய விளம்பரதாரர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செல்வி. கேமா. கந்தராசா,
செயலாளர்,
இரசாயனவியல் கழகம்.

## நூலாய்வுக்கு உகந்தவர்



CHEMISPHERE எனும் சஞ்சிகையின் ஆய்வுரையை நிகழ்த்தவுள்ள பேராசிரியர் கே.பாலசுப்பிரமணியம் ஒரு மூத்த முதன்மையான விஞ்ஞானப் பேராசிரியர் ஆவர். உயிர் இரசாயன துறையில் தனது கல்வியை நிறைவுசெய்து அத்துறை சார்ந்த போதனைகளை பல பல்கலைக்கழகங்களிலும் நிகழ்த்தியுள்ளார். கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் யாழ்.பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீடங்கள் இவற்றுள்ளே குறிப்பிடத்தக்கவை.

அத்துடன் 'பயோரெக்' நிறுவன தலைவராகவும் கடமையாற்றி வரும் பேராசிரியர் கே.பாலசுப்பிரமணியம் 1984 ஆம் ஆண்டுக்கான சிறந்த விஞ்ஞானிக்கான அதியுயா விருதையும் 2000 ஆம் ஆண்டு இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில்துறை சம்மேளனத்தின் சிறந்த கைத்தொழிலாளருக்கான விருதையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## விடாமுயற்சியின் வெளிப்பாடு



தற்போதுள்ள சூழ்நிலையைப் பொறுத்த வரையிலே அறிவியல் தொடர்பான நூல்களை வெளியிடுவது என்பது கடினமான காரியமாக எமக்குப் படவில்லை. நவீன தொழில்நுட்ப வசதிகளையும் துறைசார் வல்லுநர்களின் தொடர்புகளையும் தேவையான அளவில் தற்போது பெறக்கூடிய சூழல் யாழ்.குடாநாட்டில் காணப்படுகிறது.

எனவே விடாமுயற்சியும் அர்ப்பணிப்பு திறனும் உடையவர்களினால் சிறந்த அறிவியல் நூல்களை சமுதாய நலன்கருதியதாக வெளியிடமுடியும் என நாம் நம்புகிறோம். அத்தகைய நம்பிக்கையின் வெளிப்பாடே எமது CHEMISPHERE சஞ்சிகை வெளியீடாகும்.

நீண்டகால இடைவெளிக்கு பின்னர் நாம் இத்தகையதொரு நூலை வெளியிடுவதற்கு உறுதுணையாக அமைந்தது எமது நம்பிக்கையே ஆகும். அத்துடன் எமது நம்பிக்கைக்கு அடி வேராகவும் தாங்கும் சக்தியாகவும் விளங்கு பவர்கள் எமது துணைவேந்தர், பீடாதிபதி, துறைத் தலைவர், விரிவுரையாளர்கள், விளம்பரதாரர்கள் ஆவர். இவர்கள் அனைவருக்கும் நாம் என்றும் நன்றிக்கடன் உடையவர்கள்.

பா.வாகுலேஜன்
தலைவர்,
இரசாயனவியல் கழகம்.

## மாணவர் திறனுக்கு ஓர் களம்



யாழ்.பல்கலைக்கழக இரசாயனவியல் கழகத்தால் வெளியிடப்படும் CHEMISPHERE எனும் இரசாயனவில் சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இரசாயனவியல் கழகமானது யாழ். பல்கலைக்கழகத்தில் திறம்படச் செயற்பட்டு வரும் கழகங்களுள் ஒன்று. இந்தக் கழகமானது பல்கலைக்கழகமாணவர்களிடையே கல்வி அறிவை விருத்தி செய்யும் நோக்கத்தோடு அவர்களிடையே வினாடி வினாப் போட்டிகளையும், கருத்தரங்குகளையும் நடாத்தி வருவதுடன் விரிவுரையாளர்கள், மாணவர்களினது ஆக்கங்களைத் தாங்கிவரும் சஞ்சிகை ஒன்றையும் வெளியிட்டு வருகின்றது.

வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்வதும் ஆக்கங்களை எழுதும் கலையில் கைதேர்தலும் இளம் வயதில் ஒருவர் பெற்றுக் கொள்ள வேண்டிய பயிற்சிகள். இந்த இரசாயன வியல் சஞ்சிகையானது மாணவர்களின் எழுத்துத் திறனை விருத்தி செய்வதற்குச் சந்தர்ப்பமளிப்பது மட்டுமல்லாது, அவர்கள் தமது பாடத்திட்டங்களுக்கு வெளியே அமையும் விடயங்கள் பற்றி வாசித்துஅறிந்து கொள்வதையும் ஊக்குவிக்கிறது. அத்துடன் தாம் பெற்ற அறிவை சமூகத்தில் பரப்பவும் உதவுகிறது.

இந்தச் சஞ்சிகையை வெளியிடும் பத்திராதிபர்களினதும் கழக அங்கத்தவர்களினதும் இடைவிடா முயற்சியைப் பாராட்டுவதுடன், கழகத்தின் செயற்பாடுகள் அனைத்தும் வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

பேராசிரியர். இ.குமாரவடிவேல்
பீடாதிபதி, விஞ்ஞான பீடம்.

## பயன்மிகு கட்டுரைகள் பல...



பல வருடகால இடைவெளிக்குப் பின்னர் இரசாய னவியல் கழகத்தின் CHEMISPHERE சஞ்சிகையினது மூன்றாவது இதழ் வெளிவருவது குறித்து பெருமகிழ்ச்சியும், திருப்தியும் அடைகின்றேன். மாணவர்கள் மற்றும் ஆசான்கள் எழுதிய பயன்மிகு கட்டுரைகள் பலவற்றை இவ் இதழ் தாங்கி வருகின்றது. இவ்விதழை வெளியீடு செய்வதற்கு விடாமுயற்சியோடு உழைத்த இரசாயனவியல் கழக அங்கத்தவர்கள் பாராட்டுக்குரியவர்கள். இச்சஞ்சிகை வெளியீடு இனி வருங்காலங்களிலும் தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்களை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி. திருமதி. மீனா செந்தில்நந்தனன்.
தலைவர்,
இரசாயனவியற்துறை.
காப்பாளர், இரசாயனவியல் கழகம்.

## சவால்களின் மத்தியில் சாதனை



CHEMISPHERE(III) இற்கு வாழ்த்துச்செய்திவழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்தச் சஞ்சிகை வெளியீடானது மாணவர்களுடைய கற்றல் நடவடிக்கையில் உள்ள ஆக்கபூர்வத்தையும், உற்சாகத்தையும் வெளிக்காட்டும் நிருபணமாகின்றது. இந்தச் சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகள், இந்த நாட்டின் விஞ்ஞான அபிவிருத்திக்கான சமகால அறிவை வழங்குவதில் பெரும் பங்களிப்பை ஆற்றுமென நம்புகின்றேன். பல சவால்களை எதிர்கொண்டு இந்தச் சஞ்சிகையை வெளியிடுவதற்கு முயற்சியை மேற்கொண்ட அனைத்து அங்கத்தவர்களையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் பாராட்டுகின்றேன்.

இரசாயனவியற்துறையில் செயற்படும் இரசாயனவியல் கழகமானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விளங்குகின்ற பல கழகங்களிலே முதன்மையான ஒன்றாகக் காணப்படுகின்றது. இந்தக் கழகமானது செயலமர்வுகளை ஒழுங்குபடுத்துதல், வினாவிடைப் போட்டிகளை நடாத்துதல், சஞ்சிகைகள் வெளியிடுதல் போன்ற பல்வேறு வழிகள் மூலம் இரசாயனவியல் பற்றிய அறிவை மாணவ சமுதாயத்தினிடையே மேம்படுத்தி வருகின்றது.

CHEMISPHERE என்ற இந்த சஞ்சிகை கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக பல்வேறு காரணங்களால் இடைநிறுத்தப்பட்டு, தற்போது மீண்டும் வெளிவருகின்றது. இது இந்த ஆண்டுக்குரிய இரசாயனவியல் கழகத்தின் ஒரு பெரும் சாதனையாகும். இனிவரும் காலங்களிலும் இந்தச் சஞ்சிகை சிறப்புடன் மலரவேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பும் ஆவலும் ஆகும். இரசாயனவியல் கழகமானது தமது ஒவ்வொரு முயற்சியிலும் வெற்றிபெற எனது நல்வாழ்த்துகள்!

கலாநிதி இ. ஸ்ரீகரன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இரசாயனவியற்துறை.

**மலர் வெளியீடு மாண்புற வாழ்த்தும் நமது ஈழநாடு சமூகம்**

# தமிழரின் தன்னாட்சி அரசை அங்கீகரிக்க அமெரிக்கா – இந்தியா உதவ வேண்டும்!

## பொஸ்டன் குளோப் பத்திரிகை கூறுகிறது

வொஷிங்டன்

**இலங்கையில் போர் நிறுத்த உடன்பாடு நீடிக்கவும் - தமிழர்களின் தன்னாட்சி அரசாங்கத்தை அங்கீகரிக்கும் அரசியல் தீர்வுக்கான வரைபை ஏற்படுத்தவும், அமெரிக்காவும் - இந்தியாவும் சர்வதேச சமூக அழுத்தங்களை உருவாக்க வேண்டும் என, அமெரிக்கப் பத்திரிகையான 'பொஸ்டன்குளோப்' தனது ஆசிரிய தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.**

**நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை குழுவினால் வெளியிடப்படும் 'பொஸ்டன்குளோப்' பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது-**

காலனியாதிக்க காலத்துக்குப் பின்னைய இன விடுதலைப் போராட்டங்களான காஷ்மீர், இஸ்ரேல் - பலஸ்தீன, றுவாண்டா, சூடான் பிரச்சினைகளில் மேற்குலகம் அக்கறை காட்டியது. ஆனால், இலங்கையில் தசாப்தங்களாக நீடித்து வரும் சிங்கள பௌத்த பெரும்பான்மையினருக்கும், தமிழ் சிறுபான்மையினருக்கும் இடையேயான பிரச்சினையை மேற்குலகம் கண்டு கொள்ளாதது பெரும் சோகமானதாகும்.

2002 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் அமுலில் இருக்கும் போர் நிறுத்தம் முறிந்துபோய், மீண்டும் யுத்தம் ஏற்படாமல் தடுப்பதற்காக இலங்கை அரசாங்கம் சர்வதேச அனுசரணையாளர்களுக்கு அண்மையில் அழைப்பு விடுத்திருக்கிறது.

கடந்த மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சிங்கள பெரும்பான்மை அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே எதிர்வரும் மாதங்களில் யுத்தம் நடைபெறக்கூடும் என்று அச்சம் ஏற்பட்டுள்ளது. இலங்கைத் தீவின் வடபகுதியில் வாழும் தமிழர்களின் தேர்தல் புறக்கணிப்பினால் இரு சிங்கள கடும்போக்குத் தேசியவாத கட்சிகளின் கூட்டணியுடன் புதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளார்.

நாடாளுமன்றத்தில் மகிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரையில் - தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை நிராகரிப்பதாகவும், பெரும்பான்மை சிங்கள பௌத்தர்களின் கட்டுப்பாட்டின் கீழான ஒற்றையாட்சியே நீடிக்க வேண்டும் என்றும், ஆழிப்பேரலை மீளமைப்புக்காக புலிகள் - அரசு இணைந்து மேற்கொண்ட ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பை கலைத்துவிடுவதாகவும், நோர்வே அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட அமைதி முயற்சிகளை நீக்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த உரையைத் தொடர்ந்து இரு நாட்களுக்குப் பின்னர் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது வருடாந்த மாவீரர் நாள் உரையில் -

புதிய ஜனாதிபதிக்கும் புலிகளுக்கும் இடையே பாரிய கொள்கை இடைவெளி இருப்பதாகவும், தமிழர்கள் தங்களது பொறுமையை இழந்துவிட்டார்கள் என்றும், தமிழர் தாயகத்தில் தன்னாட்சி அரசாங்கம் தொடர்பாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்குத் தீர்வு காணும் வகையில் விரைவில் அரசியல் தீர்வுத் திட்டத்தை புதிய அரசாங்கம் முன்வைக்க வேண்டும் என்றும் பிரபாகரன் கூறியுள்ளார். புதிய அரசாங்கம் இதை நிராகரித்தால் அடுத்த ஆண்டு எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை தொடங்க வேண்டியிருக்கும் என்றும் பிரபாகரன் அந்த உரையில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை பயணம் மேற்கொண்ட அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும் ஐ.நா.சபையின் சுனாமி மீளமைப்புக்கான விசேட பிரதிநிதியுமான பில் கிளிண்டன், தற்போதைய யுத்த நிறுத்த ஒப்பந்தம் முறியும் அபாயம் இருப்பதாகத் தெரிவித்துள்ளார். இலங்கையில் மீண்டும் இனப்பிரச்சினை தொடங்கினால் சுனாமி மீளமைப்புப் பணிகள் முடங்கும் என்று கூறியுள்ளார்.

இலங்கையானது சில வரையறைகளுடனான தந்திரோபாய முக்கியத்துவமான பிரதேசமாக அமெரிக்கா கருதுகிறது. ஆனால், அமெரிக்காவின் புதிய தந்திரோபாய பங்காளியான இந்தியா புலிகளுக்கும் - சிங்களப் பெரும்பான்மை அரசாங்கத்துக்கும் யுத்தம் நடைபெறுவது தொடர்பாக அச்சம் கொண்டுள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தம் நீடிக்கவும், தமிழர்களது தன்னாட்சி அரசாங்கத்தை அங்கீகரிக்கும் அரசியல் தீர்வுக்கான வரைபை ஏற்படுத்தவும், அமெரிக்காவும் - இந்தியாவும் சர்வதேச சமூக அழுத்தங்களை உருவாக்க வேண்டும் என்றும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## சைவத் திருமுறை விழா!

யாழ்ப்பாணம்

உடுவில் கோட்ட சைவத் திருமுறை விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை காலை 8.00 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

உடுவில் கல்விக்கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் - புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்திவிநாயகர் கோவிலிலிருந்து திருமுறைச் சுவடிகளும், சமய குரவர், ஆறுமுகநாவலர் ஆகியோரது திருவுருவப்படங்களும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும்.

கலாநிதி கலைவாணி இராமநாதன், நா.சண்முகநாதன் உட்பட பலர் சிறப்புரை, ஆய்வுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசு வழங்குதலும், முன்னாள் உடுவில் கோட்டப் பணிப்பாளர் அ.தற்பரானந்தனை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (101)

## ஐந்து நாள் தொடரூ ஆசிரிய கல்விச்செயலமர்வு!

யாழ்ப்பாணம்

சமூகமயமாக்கல் கல்வி வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரிய விழுமியங்களும் தனியாள் வேறுபாடுகளுக்கேற்ப பாடங்களைத் திட்டமிடலும், பாடக்குறிப்பு எழுதுதலும் என்ற தலைப்புகளில் ஆசிரியர்களுக்கான ஐந்து நாள் தொடரூ செயலமர்வு எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை யாழ்ப்பாண தேசிய கல்வியியல் கல்லூரியில் காலை 8.30 மணி முதல் 4.30 மணி வரை நடைபெறவுள்ளதாக, யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித்தார்.

## சேவை முன்பயிற்சி!

புதிதாக ஆசிரிய நியமனம் பெற்ற தெரிவுசெய்யப்பட்ட 40 ஆசிரியர்களுக்கு சேவை முன்பயிற்சி நடைபெறவுள்ளது.

மானிப்பாயிலுள்ள ஆசிரிய வள நிலையத்தில் நாளையிலிருந்து 16 ஆம் திகதி வரை இந்த சேவை முன்பயிற்சி நடைபெறுமென வலிகாமம் கல்வி வலயம் அறிவித்துள்ளது. (101)

## பகல்நேர மின்விநியோகம் சீரின்மையால் பாதிப்புகள்!

நெடுந்தீவு

நெடுந்தீவுப் பிரதேசத்திற்கான பகல் நேர மின்சார விநியோகம் கடந்த சில நாட்களாக மேற்கொள்ளப்படாமையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுவருகிறது.

நாளாந்தம் சுழற்சிமுறையில் மின் இயந்திர இயக்குநர்கள் மாறுவதால் பகல்நேர இயக்குநர் வரத் தவறினால், இரவு நேர இயக்குநர் அதற்குப் பதிலாக இயந்திரத்தை இயக்கி மின் விநியோகத்தை மேற்கொள்ள முடியாதநிலை உள்ளதாகவும், அதன் காரணமாகவே இந்த நிலை தொடர்வதாகவும் தெரிய வருகின்றது.

இதேவேளை, பகல் நேர மின்சார விநியோகம் மேற்கொள்ளப்படாமையால் அரச அலுவலகங்களது வேலைகள், பாடசாலை மாணவர்களது கணினிக் கற்கை நெறிகள் போன்றவற்றுக்கும், வர்த்தக நிலையங்களுக்கும் இடையூறுகள் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)

## சைவசமய ஆசிரியர்களுக்கு இரண்டு நாள் செயலமர்வு

யாழ்ப்பாணம்

தரம் 6 தொடக்கம் 13 வரையான வகுப்புக்களில் சைவசமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளையும், நாளை மறுதினமும் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது.

எனவே, இந்தச் செயலமர்வில் கலந்துகொள்ளும் வகையில் பாடசாலையிலிருந்து நான்கு ஆசிரியர்களை அனுப்பிவைக்குமாறு - அதிபர்களை யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

அத்துடன், இந்த செயலமர்வில் பங்கு கொள்ளவுள்ள ஆசிரியர்கள் - மதிய உணவு, பாடநூல்கள் பாடத்திட்டம் மற்றும் கைநூல் ஆகியவற்றை கொண்டு வரவேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வழக்கு ஒத்திவைப்பு!

நெடுந்தீவு

நெடுந்தீவில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட 7 பேரின் வழக்கு ஜனவரி மாதம் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் காணாமற்போன சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் ஏழுபேர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் ஆஜர் படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

மேற்படி வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. நெடுந்தீவைச் சேர்ந்த 4 பேரும் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒவ்வொரு நாளும் கையொப்பம் இட வேண்டுமெனவும், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மூவரும் சனி, ஞாயிறு தினங்களில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் எனவும் நீதிவான் உத்தரவிட்டதுடன் மேற்படி வழக்கை ஜனவரி 2 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (113)

## குளத்தில் நீராடிய மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்தார்!

யாழ்ப்பாணம்

அரியாலை உப்புக்குளத்தில் நண்பர்களுடன் நீராடச்சென்ற மாணவன், நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் வேம்படி வீதியைச் சேர்ந்த யாழ். மத்திய கல்லூரி மாணவனான வி.பிரதீபன் (வயது 19) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று தனது நண்பர்களுடன் தனது சிறிய தாயார் வீட்டிலிருந்து உப்புக்குளத்திற்கு நீராடச் சென்ற இவர் - குளத்தில் மூழ்கியதாகவும், நீரில் மூழ்கிய இவரை நண்பர்கள் மீட்டு யாழ். போதனா வைத்திய சாலைக்குக் கொண்டுவந்தபோது அவர் உயிரிழந்ததாகவும் தெரியவருகிறது.

இவர் கிளிநொச்சியைச் சொந்த இடமாகக் கொண்டவர் என்றும் தனது சிறிய தாயாரின் வீட்டிலிருந்து கல்வி கற்று வந்தவர் என்றும் தெரிய வருகிறது.

சடலம் யாழ். போதனா வைத்திய சாலையில் மேலதிக விசாரணைகளுக்காக பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## ஆசிரிய கலாசாலை மாணவர்களும் கால வரையறையின்றி பகிஷ்கரிப்பு!

யாழ்ப்பாணம்

மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் முகமாக, காலவரையறையற்ற பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் பலாலி ஆசிரிய கலாசாலை மற்றும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவர்களும் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் தற்போது நடைபெறவிருந்த தவணைப் பரீட்சைகள் இடைநிறுத்தப்பட்டு, இப் பரீட்சைகள் யாவும் அடுத்த தவணை ஆரம்பத்தில் நடைபெறுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாணவர்களின் பிரச்சினைகளுக்கான முடிவு எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் கிடைத்தால் ஆசிரிய கலாசாலை மாணவர்களுக்கான விரிவுரைகள் நடைபெறுமெனவும், இல்லையேல் அடுத்த தவணையே கலாசாலைகள் ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (12)

## நூல் வெளியீடு!

யாழ்ப்பாணம்

யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல் சங்கத்தினால் 'கெமிபியர்' நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இரசாயனவியல் சங்கத்தின் தலைவர் பி.பாகுலேயின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல் பிரதம விருந்தினராகவும், வவுனியா வளாக முதல்வர் பேராசிரியர் திருமதி ஆர்.மகேஸ்வரன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நூல் வெளியீட்டினை சர்வதேச உயிரியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர் கே.பாலசுப்பிரமணியம் நிகழ்த்துவார்.

நூலின் முதற்பிரதியை இரசாயனவியல் சங்கத்தின் சிரேஷ்ட பொருளாளரும் விரிவுரையாளருமான கலாநிதி ஜெ.பிறின்ஸ் ஜெயதேவன் வழங்க பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல் பெற்றுக்கொள்வார். (100)

## கலை மழலை சஞ்சிகை வெளியீடு

கிளிநொச்சி

மாங்குளம் மகா வித்தியாலயத்தின் கலை மழலை சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணியளவில் பாடசாலை கேட்போர் கூடத்தில் அதிபர் திருமதி செ.விஜயகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.குரூஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

## நினைவஞ்சலிக் கூட்டம்!

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல் துறை மண்டபத்தில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில், தமிழின் மிகச்சிறந்த படைப்பாளிகளில் ஒருவரான சுந்தர ராமசாமி பற்றிய நினைவஞ்சலிக் கூட்டம் நாளை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

கலாநிதி ம.இரகுநாதன் மற்றும் எழுத்தாளர்கள் க.சட்டநாதன், அ.யேசுராசா ஆகியோர் நினைவுரைகளை ஆற்றவுள்ளனர்.

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்!

சுதுமலை

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் பிரதேச செயலகரீதியாக விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

விளையாட்டு அமைச்சில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கும், பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்குமே உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வலிகாமம் தென் மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில், நாளை காலை 10 மணிக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்ட விளையாட்டுக் கழகங்களுக்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (91)


## சிறுவிளம்பரம்

### தவறிவிட்டது

நடராசா பகீரதன் என்னும் பெயருக்குரிய மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் கடந்த 03.12.05 அன்று நல்லூர் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சரவணா ஸ்ரோர்ஸ் நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (2129)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இந்தியாவிலும் இலங்கையில் ஒரே தின வெளியீடு
சியாம், சினேகா, அபர்ணா நடித்த
ABCD
காட்சிகள்;-10.30, 2.30, 6.30, 9.00 (புதிய நேரம்)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விக்ரம் அசின் நடித்த
மஜா
காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)

மனோகரா திரையரங்கு
யாழ்.மாவட்டத்தில் முதன்முறையாக
5ஆவது வெற்றி வாரமாக...
DIGITAL dts SOUND
ஒலிநயத்துடன்
இளைய தளபதி விஜய் வெடிக்கும்
யாழ்ப்பாணம்
சிவகாசி

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

சுன்னாகம் நாகம்ஸ்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
அக்ஷன் கிங்அர்ஜுன், நமீதா மற்றும் பலர் நடித்த

காட்சிகள்:-11.00,3.00,7.00, 9.30, 1.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்
ரஜனிகாந், பிரபு, ஜோதிகா, வடிவேல் மற்றும் பலர் நடித்த
சந்திரமுகி
காட்சிகள்:-10.30,2.30, 6.30, 9.30 (பு.நேரம்)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அரச படைகளிடம் போருக்கான போதிய ஆளணிவளம் இல்லை!

## முன்னாள் விமானப் படைத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு—

இலங்கை அரசாங்கத்திடம் யுத்தம் நடத்துவதற்கான ஆயுத பலம் இருக்கலாம் - ஆனால் படைப்பலம் இருக்கிறதா என்பது சந்தேகமே என முன்னாள் விமானப்படை தளபதி எயர் மார்ஷல் ஹரி குணதிலக தெரிவித்துள்ளார்.

சண்டேலீடர் பத்திரிகைக்கு அவர் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் இதுகுறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது -

யுத்தம் உருவாவதற்கான அறிகுறிகள் தோன்றியுள்ளன. இராணுவம் உரிய ஆயதங்களைப் பெற்றிருக்கவில்லை என்று நான் கூறவில்லை. யுத்தத்தை தொடங்குவதற்கான வலிமையுடனேயே உள்ளனர். ஆனால், இராணுவத்தினரின் எண்ணிக்கைதான் சந்தேகப்பட வைக்கிறது.

இராணுவத்தினர் சிலருக்கு 2 தொகுப்பு உடையோ, தலைக்கவசமோ கூட கிடையாது.

1980 முதல் 2003 ஆம் ஆண்டு வரை அரசாங்கத்தின் புள்ளிவிபரப் படியே மொத்தம் 51 ஆயிரம் பேர் இராணுவத்தை விட்டு ஓடிப்போய் இருக்கிறார்கள். அதாவது ஆண்டுக்கு சராசரியாக 1500 பேர் இராணுவத்தை விட்டு ஓடிப்போய் இருக்கிறார்கள். ஆனால், 2002 ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட ஆண்டில் மட்டும் 8800 இராணுவத்தினர் விலகியுள்ளனர். யுத்த நிறுத்த ஒப்பந்தகாலத்தில் இது பாரிய எண்ணிக்கையாகும்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் நாள் உரையின் மூலம் யுத்தம் விரைவில் தொடங்கப்படக்கூடும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது அடுத்த ஆண்டின் தொடக்கத்திலோ, மத்தியிலோ, இறுதியிலோ இருக்கலாம். ஆனால் அநேகமாக மார்ச் ஏப்ரல் மாதங்களில் இது நடைபெறக்கூடும்.

அமைதிப் பேச்சுக்கள் தோல்வியடைந்தால், பேச்சுக்களிலிருந்து வெளியேறும் விடுதலைப் புலிகள் தாக்குதலைத் தொடங்குவார்கள். இந்த யுத்தமானது முதலில் ஒருவர் கொலை, இருவர் கொலை, கண்ணிவெடித் தாக்குதல், முகாம் மீதான தாக்குதல், சோதனைச் சாவடிகள் மீதான தாக்குதல்கள் என்று நாளாந்தம் தொடங்கி பின்னர் விரிவுபடுத்தப்படக் கூடும்.

விடுதலைப் புலிகளை எப்போது தமிழ் மக்கள் பயங்கரவாத இயக்கமாக - விடுதலைப் போராட்ட இயக்கம் இல்லை என்ற எண்ணத்துடன் பார்க்கிறார்களோ அப்போது தான் நாம் வெற்றி பெற முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜாதிக ஹெல உறுமயவுடன் ஜனாதிபதி சந்தித்துப் பேச்சு!



கொழும்பு—

புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜக்ஷ அரசியல் கட்சிகளுடன் முதலாவது சுற்றுப் பேச்சுக்களை நேற்று ஆரம்பித்தார்.

முதலாவது கலந்துரையாடல் நேற்று அலரி மாளிகையில் ஜாதிக ஹெல உறுமயவுடன் நடத்தப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சித் தலைவருமாகிய எல்லாவல மேதானந்த தேரர் தலைமையிலான மதகுருமார்குழு இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றியது.

இந்தச் சந்திப்பின் போது ஜாதிக ஹெல உறுமய சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு பூரண ஆதரவு வழங்குவதாக உறுதியளித்ததாக அலரிமாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

## இராணுவத்...

இராணுவத்தில் இணைந்த லெப்ஜெனரல் சரத்பொன்சேகா 35 வருட இராணுவ சேவைக்காலத்தில் மிகவும் பிரபலம் பெற்ற இராணுவ அதிகாரியாக விளங்குபவர்என்பது குறிப்பிடத்தக்கது.

## உஷார் நிலையில்...

தளங்கள் துறைமுகங்களும் படையினரின் உச்சக்கட்ட விழிப்பு நிலையிலிருக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் வடக்கு- கிழக்கு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் படையினர் மேலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தவும் உத்தரவிடப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவித்தன.

## புலிகள்...

அரச சமாதானச் செயலகம் இந்தச் சந்திப்புத் தொடர்பாக மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனுக்கு அறிவிக்காததாலேயே அவர் முகமாலைக்கு வரவில்லையென்று கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்னர்.

நேற்றுடன் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட ஓய்வுபெற்றுச் சென்றுவிட்டதாலும் இன்றே புதிய தளபதியாக லெப். ஜெனரல் சரத் பொன்சேகா பதவியேற்கவுள்ளார்.

இந்த நிர்வாகச் சிக்கல் காரணமாகவே யாழ்.படைகளின் தளபதிக்கு உரிய உத்தரவு வழங்கப்படவில்லை என்றும் செய்திகள் தெரிவித்தன.

## பங்குச் சந்தை வீழ்ச்சி!

கொழும்பு—

கோண்டாவிலில் நேற்று முன்தினம் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து கொழும்பு பங்குச் சந்தையில் நேற்று வீழ்ச்சி ஏற்பட்டது.

முதலீட்டாளர்கள் பங்குகளைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டாததாலேயே இந்த வீழ்ச்சி ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியான பின்னர் கொழும்புப் பங்குச் சந்தையில் தொடர்ந்தும் வீழ்ச்சி நிலை காணப்படுகிறது.

# காவல்துறை பொறுப்பாளர் நடேசனை ஐ.நா. ஆலோசகர் சந்தித்துப் பேச்சு!



கிளிநொச்சி—

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனுடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஸ்தாபனத்தின் மனித உரிமைகளுக்கான சிறப்பு ஆலோசகர் பிலிப் அல்ஸ்ரன் தலைமையிலான குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் தமிழீழ காவல்துறையின் செயற்பாடுகள், மனித உரிமைகள் தொடர்பான விடயங்கள் குறித்து சுமார் ஒரு மணிநேரம் கலந்துரையாடப்பட்டது.

மேலும் வடக்கு - கிழக்கின் தற்போதைய நிலை தொடர்பாகவும் போர் நிறுத்த காலத்தின்போது சமாதான நடவடிக்கைக்கு பாதகம் விளைவிக்கக் கூடிய வகையில் இலங்கை இராணுவ புலனாய்வுத்துறை - அதனுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக்குழுக்கள் தொடர்பாகவும் சிறப்புப் பிரதிநிதி யிடம் பா.நடேசன் விரிவாக எடுத்துரைத்தார்.

அத்துடன், தென்னிலங்கையில் சமாதானத்திற்கெதிராகச் செயற்படும் அரசியல் சக்திகள் தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

# காயமுற்றிருந்த சிப்பாய் நேற்றுக்காலை மரணம்!

கொழும்பு—

கோண்டாவிலில் படையினர் உழவு இயந்திரம் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் படுகாயமடைந்திருந்த இராணுவச் சிப்பாய் நேற்றுக் காலை மரணமானார்.

நேற்று முன்தினம் நடந்த கிளைமோர் தாக்குதலில் 6 படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

ஒருவர் மட்டும் படுகாயமடைந்த நிலையில் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த எப்பாவலையைச் சேர்ந்த ஜெயதேவ என்ற சிப்பாய்யே நேற்றுக் காலை மரணமானார்.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட படையினர் தொகை இதன் மூலம் ஏழாக உயர்ந்துள்ளது.

# பாதுகாப்பு வலய மீள் குடியமர்வு; ஆராய அரச அதிபருக்கு உத்தரவு!

கொழும்பு—

பலாலி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் - மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக ஆராயுமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பலாலி அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் தம்மைக் குடியேற அனுமதிக்குமாறும், விவசாயம் மேற்கொள்ள அனுமதிக்குமாறும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மற்றும் விவசாயிகள் இணைந்து அடிப்படை உரிமை மனுவொன்றை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து சுமார் 20 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அவசரகாலச் சட்டத்தின் கீழ் தமது பிரதேசங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் இந்த மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே, இது குறித்து மாவட்ட அரசாங்க அதிபர் அறிக்கையை எதிர்வரும் பெப்ரவரி 27 ஆம் திகதி சமர்ப்பிக்குமாறும், அன்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## குடாநாட்டு வீதிகளில்...

வதைப் பெரிதும் குறைத்துள்ளனர்.

ஏ-9 வீதியில் அமைந்துள்ள அரியாலைப் பகுதியில் பெருமளவிலான படையினர் குவிக்கப்பட்டுள்ளதனால் அந்தப்பகுதி மக்கள் பயப்பீதியுடன் நடமாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, யாழ்.வைத்தீஸ்வராச் சந்தியிலும், மனோகராச் சந்தியிலும் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து வாகனங்கள், மோட்டார் சைக்கிளில் செல்வோரை மறித்து உடற்பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

அத்துடன், சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் போன்றவற்றை இவர்கள் பரிசோதித்ததுடன் வாகனங்களின் பாகங்களையும் சோதனையிட்டதை அவதானிக்க முடிந்தது.

நேற்று நண்பகல் நீர்வேலிப் பகுதியில் கேட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தங்களையடுத்து அந்தப்பகுதியில் படையினர் குவிக்கப்பட்டதுடன் வீதிப் போக்குவரத்தும் சிறிதுநேரம் தடைப்பட்டது.

அதேவேளை, சிறுப்பிட்டி - புத்தூர் பகுதிகளில் பருத்தித்துறை வீதியூடான போக்குவரத்தும் படையினரால் தடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## புலிகள் தாக்குதல்...

ஆனால் அப்படி எந்தச் சான்றும் கிடைக்கவில்லை.

கோண்டாவில் பகுதியில் இடம்பெற்ற சம்பவம் போர் நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் ஏற்பட்ட மிக மோசமான சம்பவம் என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இப்போது ஏற்பட்டுள்ள நிலைமையானது போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர் இடம்பெற்ற மோசமான நிலையென இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் அரஸ்ரோட்டில் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவின் பின்னர் யாழ்ப்பாணத்தில் அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

இந்த நிலைமையானது நாங்கள் எதிர்நோக்கிய பாரதூரமான சம்பவமாகும். யாழ்பாணத்தில் ஏற்பட்டுள்ள நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இருதரப்பையும் சந்திக்க முயற்சி செய்தபோதும் அது நிறைவேறவில்லை.

யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்லாது திருகோணமலையிலும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இரண்டு தரப்பில் இடம்பெற்ற கொலைச் சம்பவங்கள் இதற்கான காரணங்களாகும்.

வடக்குடன் நோக்கும்போது கிழக்கில் ஓரளவு அமைதி ஏற்பட்டுள்ளது என்றாலும் பதற்ற நிலைமை தொடருகிறது. இதற்கு தீர்வுகாண அரசாங்கத்தினதும் தமிழீழ விடுதலைப் புலிகளதும் ஒத்துழைப்பு தேவையாகும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# ஓய்வுபெற்றார் கொட்டேகொட!



கொழும்பு—

இலங்கையின் 17 ஆவது இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட நேற்று தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். இவருக்கு ஜெனரலாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதியாக இருந்த ஜெனரல் சாந்தகொட்டேகொட - நேற்று ஓய்வு பெற்றதை முன்னிட்டு இராணுவத் தலைமையத்தில் விசேட வைபவமொன்று இடம்பெற்றது.

நேற்றுக்காலை இராணுவத் தலைமையகம் சென்ற ஜெனரல் கொட்டேகொட, இராணுவ உயரதிகாரிகளால் வரவேற்கப்பட்டார். சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் மத்தியில் சம்பிரதாய பூர்வமாக புதிய இராணுவத்தளபதியிடம் சாந்த கொட்டேகொட பொறுப்புகளை கையளித்தார். இங்கு ஓய்வு பெற்ற இராணுவத் தளபதியின் உருவப் படத்தை புதிய இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா திரைநீக்கம் செய்து வைத்தார்.

ஓய்வு பெற்ற இராணுவத் தளபதி ஜெனரல் சாந்த கொட்டே கொட நேற்றைய தனது பிரியாவிடை உரையில்-

ஆசிய வலயத்தில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகின்றபோது இலங்கை இராணுவம் பெற்ற அனுபவம் மிகப் பெரியது. இதற்குப் பிரதான காரணம் கடந்த இரண்டு தசாப்தகாலமாக இடம்பெற்ற யுத்தமாகும்.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து தற்போது வரை நிலவுகின்ற அமைதியான சூழல் மூலமாகவும் எமது இராணுவம் பல அனுபவங்களைப் பெற்றுக் கொண்டது.

யுத்தத்திலும், சமாதானத்திலும் பயிற்சி பெற்ற இராணுவத்தினராக உலக நாடுகளின் மத்தியில் எமது இராணுவம் முக்கியம் பெற்று விளங்குகிறது .போர்நிறுத்தத்தை மீறி இராணுவத்தினர் மீது தொடர்ச்சியான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த வாரத்தில் மட்டும் 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இராணுவத்தை ஆத்திரமூட்டும் வகையில் இந்தத் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்தி வருகின்றனர்.

கடந்த காலங்களில் இராணுவத் தரப்பில் தோல்விகள் இருந்தபோதும் இந்த முறை விடுதலைப் புலிகளை இராணுவம் தோறகடித்துவிடும்.

அரச படையினருக்கு எதிராக ஒழுங்கமைக்கப்பட்ட தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்தி வருகின்றனர்.

கடந்த 3 ஆண்டுகளில் நாம் வலுவான பயிற்சிகளைப் பெற்றுள்ளோம். போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு முன்னைய நிலையைவிட நாம் இப்போது தயாராகவுள்ளோம்.

விடுதலைப் புலிகளுடன் போரிடவும் அவர்களைத் தோற்கடிக்கவும் நாம் வலுவாகவுள்ளோம் என சாந்த கொட்டேகொட ,மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.12.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.